# பொதுப்பணித்துறை
# நீர்வள ஆதாரத்துறை

# திட்டச் சாதனை
# 2015–2016

©
தமிழ்நாடு அரசு
2016

# பொதுப்பணித்துறை
# நீர்வள ஆதாரத்துறை

## 1.0. பொது

சுற்றுச்சூழல் பயன்பாடு, சமூகப் பயன்பாடு மற்றும் மீன் வளங்களின் தேவைகள் மட்டுமின்றி, தொழில்மயமாக்கல் மற்றும் பெருகி வரும் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்து, மாநிலத்தின் முழுமையான வளர்ச்சியினை உறுதி செய்வதில், நீர்வள ஆதார மேலாண்மை பெரும்பங்கு வகிக்கிறது. குறைந்த அளவிலான நீர் இருப்பு மற்றும் பல்வேறு பயன்பாட்டிற்கு பெருகிவரும் தேவைகளையும் கருத்தில் கொண்டு, சாத்தியக்கூறு உள்ள இடங்களில் புதிய பாசன அமைப்புகளை உருவாக்குதலும், பயன்பாட்டிலுள்ள பாசனக் கட்டமைப்புகளை புனரமைத்து, மேம்படுத்தி, நவீனப்படுத்துதல் மிகவும் அவசியமானதாகும். பாசன அமைப்புகளின் சேவை பங்களிப்பை உயர்த்துவதன் மூலம், உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான பணிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. நீர் பயனீட்டுத்திறனை உயர்த்துதல், இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளில் வேளாண் பெருமக்களின் பங்களிப்பு, தானியங்கி கால்வாய் அமைப்புகளை உருவாக்குதல், தர மதிப்பீடு மற்றும் திறன் மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளின் மூலம் இது உறுதி செய்யப்படுகிறது.

மேலும், நதிகளை இணைக்கும் திட்டங்கள், செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டங்கள், வெள்ள மேலாண்மைத் திட்டங்கள், கடலோர பாதுகாப்புத் திட்டம், மரபு சார்ந்த நீர் நிலைகளை சீரமைக்கும் பணிகள், குடிநீர்த் தேவைகளை மேம்படுத்தும் திட்டங்கள் போன்ற திட்டப்பணிகளை மேற்கொண்டு குறுகிய கால அளவில் பெறப்படும் பருவகால வெள்ள நீரோட்டத்தினை முறையாக சேமித்து நீர்வள ஆதாரத்தை பெருக்கி, மேம்படுத்தி, திறம்பட பயன்படுத்த அரசு முனைந்து வருகிறது.


## 2.0. 2015–2016–ஆம் ஆண்டுக்கான மூலதனம் மற்றும் திட்டச் செயல்பாடுகள்


2015–2016–ஆம் நிதியாண்டில், கோரிக்கை எண்.40 (பாசனம்) அரசால் ஒப்பளிக்கப்பட்ட நிதி மற்றும் திட்டச் செயல்பாடுகள் பின்வருமாறு :

**(ரூபாய் கோடியில்)**


| திட்டத்தின் தலைப்பு | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு (2015–2016) | திருத்திய திட்ட ஒதுக்கீடு (2015–2016) | செலவினம் |
|---|---|---|---|
| **திட்டம்** | | | |
| மாநில நிதித் திட்டங்கள் | 581.29 | 362.91 | 253.33 |
| நீர்வள நிலவளத் திட்டம் | 6.15 | 24.77 | 21.86 |
| மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை | 0.16 | 1.22 | 0.72 |
| நபார்டு கடனுதவித் திட்டங்கள் | 336.38 | 288.98 | 300.87 |
| தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் | - | 0.01 | 0.0073 |
| அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் | 450.13 | 143.42 | 59.42 |
| பன்முக திட்டக் குழுமம் (பணியமைப்பு) | 5.02 | 9.91 | 5.40 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புக் குழுமத் திட்டம் | 97.00 | 54.45 | 34.71 |
| 13வது நிதிக்குழுவின் மானிய நிதியுதவித் திட்டம் | 71.10 | 27.79 | 25.69 |
| மத்திய மாநில அரசு பங்களிப்புத் திட்டங்கள் (AIBP & RRR) | 100.00 | 25.38 | 16.06 |
| செயற்கை முறையில் நிலத்தடி நீர்ச் செறிவூட்டும் திட்டம் | 1.30 | 1.78 | 1.74 |
| மாநில நதிகள் இணைப்புத் திட்டம் | 253.50 | 113.16 | 7.02 |
| **மொத்தம் (திட்டப் பணிகள்)** | **1902.03** | **1053.78** | **726.81** |
| பன்முக குழுமம் (பணியமைப்பு ) | 1.59 | 2.23 | 1.77 |
| **மொத்தம் (பணியமைப்பு) மதிப்பீடு** | **1.59** | **2.23** | **1.77** |
| **மொத்தம் (திட்டப் பணிகள் மற்றும் பணியமைப்பு)** | **1903.62** | **1056.01** | **728.58** |
| **திட்டம் சாராதது** | | | |
| முறை சார்ந்த பாசன அமைப்பு பராமரிப்பு | 176.87 | 176.79 | 204.06 |
| முறை சாரா பாசன அமைப்பு பராமரிப்பு | 49.21 | 49.21 | 48.75 |
| மாநகர குடிநீர் வழங்குதல் –பராமரிப்பு | 0.54 | 0.54 | 0.52 |
| இதர பராமரிப்பு | 0.84 | 0.84 | 0.82 |
| மணல் குவாரி | 24.78 | 15.30 | 15.85 |
| **மொத்தம் (திட்டம் சாராப் பணிகள்)** | **252.24** | **242.68** | **270.00** |
| **மொத்தம் (திட்டம் மற்றும் திட்டம் சாராப் பணிகள்)** | **2155.86** | **1298.69** | **998.58** |

## கோரிக்கை எண்.40–இல் ஒப்பளிக்கப்பட்ட நிதி இனங்கள்






## 2015–2016–இல் செலவினம்



## 3.0. 2015 – 2016–ஆம் ஆண்டில் செயலாக்கப்பட்ட திட்டப் பணிகள்

2015–16–ஆம் ஆண்டில் செயலாக்கப்பட்ட சில முக்கிய திட்டப்பணிகளின் விவரங்கள் பின்வருமாறு :

- உலக வங்கி கடனுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட நீர்வள நிலவளத் திட்டம் (IAMWARM Project)
- 13வது நிதிக் குழுவின் மானிய நிதியுதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மரபு சார்ந்த நீர்நிலைகளைப் புதுப்பித்தல் மற்றும் கடலோர பாதுகாப்பு பணிகள்.
- செயற்கை முறையில் நிலத்தடி நீர்ச்செறிவூட்டும் திட்டங்கள்.
- உலக வங்கி கடனுதவியுடன் நடைபெற்று வரும் அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (DRIP).
- மாநில நிதி திட்டப் பணிகள்.
- தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) நிதியுதவியுடன் செயலாக்கப்படும் திட்டங்கள் / பணிகள்.
- மத்திய – மாநில அரசுகளின் பங்களிப்போடு நடைபெற்று வரும்

  அ) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டம் (JNNURM Scheme)

  ஆ) வேளாண்மையுடன் நேரடித் தொடர்புடைய நீர்நிலைகளை “செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல்” திட்டம் (RRR).

- ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவியுடன் மேற்கொள்ளப்படும் காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாற்றத்தை தழுவல் திட்டம்.
- விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின் (AIBP) கீழ் காவேரி ஆற்றுப் படுகையை நவீனப்படுத்தும் திட்டம்.
- அணைகளைத் தூர்வாரும் திட்டம்.
- மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டம்.

## 3.1. புதிய பாசன உள்கட்டமைப்புகளை உருவாக்குதல்

### 3.1.1. புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குதல்

**முடிவுற்ற பணி**

- தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம், பேய்குளம், பொட்டைகுளம் மற்றும் கோரம்பள்ளம் குளங்களை நீர்த்தேக்கமாக தரம் உயர்த்தும் பணி ரூ.20.07 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

- கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், சிக்கலப்பள்ளி கிராமத்தின் அருகே உள்ள வானியோடில் பெண்ணையாற்றின் குறுக்கே சின்னாறு சேருமிடத்தில் ஒரு புதிய நீர்த்தேக்கத்தினை அமைக்க விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள, நில அளவை மற்றும் மட்ட அளவைப் பணிகள் ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.
- பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம், மருதையாற்றின் குறுக்கே ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி ரூ.124.20 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம், கண்ணன்கோட்டை கிராமத்தில், கண்ணன்கோட்டை இசா இராஜநேரி மற்றும் தேர்வாய்கண்டிகை ஏரிகளை இணைத்து ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி ரூ.330.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.
- வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பத்தலப்பள்ளி கிராமம், மலட்டாற்றின் குறுக்கே மண் அணை, வழிந்தோடி மற்றும் ஆற்று மதகுகள் அமைக்கும் பணிகள் ரூ.29.55 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளன.

### 3.1.2. புதிய கதவணை அமைத்தல்

**நடைபெற்று வரும் பணி**

- கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில், ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களின் அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு புதிய கதவணை அமைக்கும் திட்டத்திற்கான விரிவான ஆய்வு மற்றும் மண் பரிசோதனைகளை மேற்கொள்ளுவதற்காக ரூ.24.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன்படி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.430.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

### 3.1.3. புதிய அணைக்கட்டுகள் மற்றும் நீரொழுங்கிகள்

**முடிவுற்ற பணி**

- திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், ஜம்புவானோடை கிராமம், தொலை கல் 26.40 கி.மீ–இல் கந்தப்பரிச்சனார் வடிகாலின் குறுக்கே 250 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதி செய்யும் வகையில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கடைமடை நீரொழுங்கி அமைக்கப்பட்டுள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

- திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம் மற்றும் கிராமத்திலுள்ள திருமணிமுத்தாற்றின் குறுக்கே அஞ்சனக்காரன்குளம் அணைக்கட்டினை மறு கட்டுமானம் செய்யும் பணி ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கோடக்காரமூலை கிராமத்திலுள்ள நல்லூர் உப்பனார் வடிகாலின் குறுக்கே புதிய கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி ரூ.1.78 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், புளியந்துறை கிராமத்திலுள்ள நல்லூர் சின்னார் வடிகாலின் குறுக்கே புதிய கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளது.
- பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், அத்தியூர் கிராமத்தின் அருகே வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூ.8.11 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ஆளப்பிறந்தான் ஏரிக்கு நீர் வழங்குவதற்கு தெற்கு வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூ.7.09 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- சிவகங்கை மாவட்டம், தேவக்கோட்டை வட்டம், உதயாச்சி கிராமம், கல்குடி ஏரி மற்றும் அதன் தொகுப்பு ஏரிகளுக்கு நீர் வழங்க மணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூ.10.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அலிவலம் கிராமத்திலுள்ள வழங்கு வாய்க்கால்களை மேம்படுத்துவதற்கும், முடத்தானி ஏரி, கொத்தமங்கலம் ஏரி மற்றும் சீத்தாம்பாள்புரம் ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்கும், நரியாற்றின்

குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பைங்காட்டூர் கிராமத்தில் கோரையாற்றின் குறுக்கே தொலைகல் 130.00–இல் புதிய நீரொழுங்கி அமைக்கும் பணி ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், ஒதலவாடி ஏரிக்கு நீர் வழங்கும் பொருட்டு அரும்பலூர் கிராமத்திற்கு அருகில் செய்யாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூ.7.21 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

### 3.1.4. புதிய தடுப்பணைகள், படுகை அணைகள் மற்றும் தளமட்டச்சுவர்கள் அமைத்தல்

#### முடிவுற்ற பணிகள்

- திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், வேம்பார்பட்டி கிராமம், சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே 250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் புதிய தடுப்பணை ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, புலன்குளம் ஏரியின் கீழ் உள்ள 19 ஏக்கர் பாசனப்பரப்புக்கு நீர் வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.
- திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், ஆவிலிப்பட்டி கிராமம், சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே 300 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் புதிய தடுப்பணை ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நெடுங்குளம் ஏரியின் கீழ் உள்ள 29.66 ஏக்கர் பாசனப்பரப்புக்கு நீர் வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.
- திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், கோம்பைப்பட்டி கிராமம் சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே, நிலத்தடி நீர் செறிவூட்டப்படுவதன் மூலம் 15.65 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் புதிய தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், வசிஷ்டாச்சேரி கிராமம் வீரசோழன் ஆற்றின் குறுக்கே தொலை கல் 131.20 கி.மீ–இல் தளமட்டச் சுவரினை மறு கட்டுமானம் செய்யும் பணி ரூ.0.95 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.
- நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், நெடுகுலா (கப்பாத்தி) கிராமம், மில்லித்தானே குறுக்கே புதிய தடுப்பணை ரூ.0.65 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவிசநல்லூர் கிராமம், ஏ 73–வேப்பத்தூர் கால்வாய்க்கு நீர்வழங்க காவேரியின் குறுக்கே தொலைகல் 98.40 கி.மீ–இல் 1,381 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் புதிய படுகை அணை ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், உப்பூர் கிராமம், கோரையாற்றின் குறுக்கே படுகை மட்ட அளவை பாதுகாத்து, உப்பூர் வாய்க்காலுக்கு நீர் வழங்க தொலைகல் 149.230 கி.மீட்டரில் புதிய தளமட்டச் சுவர் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், மரைக்கோரையாற்றில் தொலைகல் 17.290 கி.மீ–இல் ஆற்றின் உரிய படுகை மட்டத்தை பெற்று இடும்பவனம் கிராமத்தின் தொண்டியக்காடு வாய்க்காலுக்கு நீர் வழங்க ஏதுவாக ஒரு தளமட்டச் சுவர் ரூ.0.94 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், பெரும்பண்ணையூர் கிராமம், சோழசூடாமணியாற்றின் குறுக்கே புதிய தளமட்டச் சுவர் ரூ.0.71 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், சித்தாம்பூர் கிராமம், அய்யாற்றின் குறுக்கே, 162 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதி பெறும் வகையில், புதிய தடுப்பணை ரூ.6.45 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், வெள்ளானூர் கிராமம், நந்தியாற்றின் குறுக்கே 145 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதி பெறும் வகையில், புதிய தடுப்பணை ரூ3.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், இருங்கலூர் கிராமம், உப்பாற்றின் குறுக்கே 210 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதி பெறும் வகையில், புதிய தடுப்பணை ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அம்மாபேட்டை கிராமம், அரியாற்றின் குறுக்கே 217 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதி பெறும் வகையில், புதிய தடுப்பணை ரூ.3.06 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம், நாகயநல்லூர் கிராமம், கரைபோட்டனார் ஆற்றின் குறுக்கே 483 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதி பெறும் வகையில், புதிய தடுப்பணை ரூ.2.94 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், வீரமச்சான்பட்டி கிராமம், அய்யாற்றின் குறுக்கே, 340 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதி பெறும் வகையில், புதிய தடுப்பணை ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மலையாடிப்பட்டி கிராமம், தொம்பச்சி ஆற்றின் குறுக்கே, 423 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதி பெறும் வகையில், புதிய தடுப்பணை ரூ.1.66 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், நாகநல்லூர் கிராமம், தளுகை ஆற்றின் குறுக்கே, 104 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதி பெறும் வகையில், புதிய தடுப்பணை ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், வையம்பட்டி அருகே ஏ.ரெட்டியப்பட்டி கிராமத்தில், கண்ணூத்து ஆற்றின் குறுக்கே, 293 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதி பெறும் வகையில், புதிய தடுப்பணை ரூ.0.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், மேலரசூர் கிராமம், மானோடை குறுக்கே புதிய தடுப்பணை ரூ.0.87 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி வட்டம், கன்னிவடுகப்பட்டி கிராமம், கோரையாற்றின் குறுக்கே, 290 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதி பெறும் வகையில், புதிய தடுப்பணை ரூ.0.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், கே.புதுப்பட்டி கிராமம், உப்பார்வாரி ஆற்றின் குறுக்கே புதிய தடுப்பணை ரூ.0.55 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், கோட்டைப்பட்டி கிராமத்தின் அருகே, வைப்பாற்றின் குறுக்கே, 309 ஏக்கர் பாசனப்பரப்பு பயன்பெறும் வகையில், ரூ.5.44 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

- அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், சிறுவலூர் கிராமத்திலுள்ள கல்லாறு ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், கள்ளன்குறிச்சி கிராமத்தின் அருகே தாமரை ஓடையின் குறுக்கே ரூ.0.73 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், அர்த்தநாரிப்பாளையம் கிராமத்திலுள்ள, நல்லாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், செஞ்சேரிபுத்தூர் கிராமத்திலுள்ள செஞ்சேரிகரை ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், நஞ்சுண்டபுரம் கிராமத்திலுள்ள, சங்கனூர்பள்ளம் ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி ரூ.1.19 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், மாலிகம்பட்டு கிராமத்தின் அருகே கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம், பறையப்பட்டிபுதூர் கிராமத்தில் வாணியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், புதிநத்தம் கிராமம், மாம்படி அருகே எமதீர்த்த ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.56 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், அய்யம்பாளையம் கிராமத்திலுள்ள கொடகனாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.5.65 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், பெருமுகை கிராமத்திலுள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.94 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், பர்கூர் கிராமம், மின்தாங்கியின் அருகேயுள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், அவல்பூந்துரை கிராமத்திலுள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.17 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நெல்வாய் கிராமம் அருகே நெல்வாய் மடுவின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும்  வட்டம், வாலாஜாபாத் அருகில், அங்கம்பாக்கம் கிராமத்தில் புல எண்.133–இல் மடுவின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.52 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், இராஜக்காமங்கலம் கிராமத்தின் அருகே பென்னையூர் பாலத்தின் மேற்புரம் பன்னிவாய்க்காலின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், ஆண்டான்கோவில் கிராமம், பெரியாறு நகரின் அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.15.16 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், புதுப்பட்டி கிராமத்திலுள்ள, புங்காற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.83 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், செல்லிவலசு கிராமத்திலுள்ள நங்காஞ்சியார் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி  ரூ.1.71 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிகோட்டை வட்டம், அஞ்செட்டி கிராமம் அருகே கோவையாற்றின் (குண்டுமடஹள்ளா) குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிகோட்டை வட்டம், பேவநத்தம் கிராமத்தின் அருகே காட்டோடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.44 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டம், கொளத்தூர் வட்டம், சூரியூர் (வில்லாரோடை) கிராமத்தின் அருகே கோரையாற்றின்  குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.3.09 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், முத்துநாயக்கன்பட்டி கிராமம் அருகே சரபங்காநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காவனூர் கிராமம் அருகே விருசுளியாற்றின் குறுக்கே, தடுப்பணை அமைக்கும் பணி ரூ1.71 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கூக்கல்துறை கிராமம் அருகே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.90 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் வட்டம், உடையாரட்டி கிராமம் அருகே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.71 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நெய்வேலிவடபாதி கிராமம் அருகே, அக்னியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.7.45 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், மணஞ்சேரி கிராமம், காவேரியாற்றின் குறுக்கே, படுகை அணையினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், வாலிப்பாறை மற்றும் கோவிந்தநகரம் கிராமங்களில் வைகையாற்றின் குறுக்கே இரண்டு தடுப்பணைகள் அமைக்கும் பணிகள் ரூ.4.95 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

- தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், மயிலாடும்பாறை கிராமத்தில் வைகையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- தேனி மாவட்டம் மற்றும் வட்டம், அம்பாசமுத்திரம் கிராமத்தின் அருகே வைகையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.34 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், கோடங்கிப்பட்டி கிராமம், தீர்த்ததொட்டி முருகன் ஆலயத்தின் அருகே, கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம் மற்றும் கிராமம், பட்டாக்களம் அருகே, கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- தேனி மாவட்டம், உத்தமப்பாளையம் வட்டம், காமையகவுண்டன் பட்டி மற்றும் நாராயணதேவன்பட்டி கிராமங்களின் அருகே, கூத்த நாச்சியார் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.62 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- தேனி மாவட்டம், உத்தமப்பாளையம் வட்டம், டி.இரங்கநாதபுரம் கிராமத்தின் அருகே, சுத்தகங்கை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.48 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், சேர்ந்தமங்கலம் கிராமத்தின் (முக்காணி) அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.25.75 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், கீழ்நாட்டுக்குறிச்சி கிராமம், வைப்பாறு ஆற்றின் குறுக்கே புல எண்.205–இல் தடுப்பணை அமைக்கும் பணி ரூ.9.20 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், கொம்பன்குளம் கிராமத்தின் அருகே கருமேனியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், இருதயபுரம் கிராமத்தின் அருகே நந்தியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், தண்டலைபுதூர் கிராமத்தின் அருகே அய்யாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.59 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், ஸ்ரீதேவிமங்கலம் கிராமத்தின் அருகே உப்பாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், பொன்னனியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.27 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், சமுத்திரம் கிராமத்தின் அருகே மாமுண்டியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.09 கோடி மதிப்பீட்டில் நிறைவடையும் தருவாயில் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் வட்டம், கும்பக்குடி கிராமத்தின் அருகே காட்டாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி வட்டம், வேம்பனூர் கிராமத்தின் அருகே வெள்ளாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருப்பத்தூர் கிராமத்தின் அருகே சண்முகாநதி ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.01 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், குமாரவாடி கிராமத்தின் அருகே கண்ணூத்து ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.67 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், ஆலந்தூர் கிராமத்தின் அருகே கொத்தமங்கலம் வாரியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.66 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், கருப்பூர் கிராமத்தின் அருகே கோரையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.0.57 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், வளையப்பாளையம் கிராமத்தின் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.21 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், எள்ளபாளையம்புதூர் அருகே நெழலி கிராமத்தில் நெழலிக்கரை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.19 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கொண்டாம்பட்டி கிராமத்தின் அருகே உப்பாறு ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பட்டரைபெரும்புதூர் கிராமத்தில் அருள்மிகு வீரராகவப் பெருமாள் கோவில் குளத்திற்கு நீர் கொண்டு செல்லும் வகையில் கொசஸ்தலையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், புட்லூர் கிராமத்தின் அருகே கூவம் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூ.6.22 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், மும்முனி கிராமம் அருகே சுகநதியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டம், மாதிரிமங்கலம் கிராமம் அருகே காவேரி ஆற்றின் குறுக்கே தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம், கீவளூர் வட்டம், கக்கழனி கிராமம் அருகே கடுவையாற்றின் குறுக்கே தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டம், கொடிமங்கலம் கிராமத்தில் காஞ்சிவாய் வாய்க்கால், நாகம்பாடி வாய்க்கால் மற்றும் நல்லாவூர் வாய்க்கால்களில் நீர் வழங்க நாட்டாற்றின் குறுக்கே தொலைகல் 70/3 மைலில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கொத்தங்குடி கிராமத்தில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.0.93 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மேலப்பண்ணையூர் கிராமம் அருகே விக்ரமன் ஆற்றின் குறுக்கே தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.0.92 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம், கோட்டூர் கிராமம் அருகே புத்தாற்றின் குறுக்கே தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.0.84 கோடி மதிப்பீட்டில் முடிவுறும் தருவாயில் உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டம், முருகன்தோட்டம் கிராமம் அருகே மகிமலையாற்றின் குறுக்கே தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.0.52 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு கிராமத்திலுள்ள திருவையாறு, கல்யாணபுரம், ஊமை வாய்க்கால்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு காவேரி ஆற்றின் குறுக்கே மைல் 37/6 மைலில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பழையூர் கிராமத்திலுள்ள பாமணியாற்றின் குறுக்கே தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், கடைத்தேறு கிராமத்திலுள்ள கடைத்தேறு வாய்க்காலின் உரிய தளமட்ட அளவினை பராமரித்து, நீர் வழங்கும் பொருட்டு கோரையாற்றின் குறுக்கே தொலைகல் 128.540 கி.மீ.–இல் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், நல்லிச்சேரி கிராமத்தில் அரசலாற்றின் குறுக்கே தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம் மற்றும் கிராமத்திலுள்ள ஏ1 ஹனுமந்தபுரம் வாய்க்கால்களுக்கு நீர் வழங்கும் பொருட்டும், கோரையாற்றின் படுகை மட்ட அளவினை பராமரிக்கும் வகையிலும் கோரையாற்றின் குறுக்கே மைல் 62/1–இல் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், குமுட்டிதிடல் கிராமத்தில் கந்தபரிச்சனார் கிளை வாய்க்காலின் குறுக்கே தளமட்டச் சுவர் அமைக்கும் பணி ரூ.0.86 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், கத்தாளம்பட்டு கிராமம் அருகே நாகநதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பழைய ஆதிக்குப்பம் கிராமம் அருகே பாம்பாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், அச்சன்குளம் கிராமம் அருகே வைப்பாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.5.62 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

### 3.1.5. புதிய கால்வாய்கள் / வழங்கு வாய்க்கால்கள் அமைத்தல்

**முடிவுற்ற பணிகள்**

- கிருஷ்ணகிரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்திலுள்ள, கேசரிகுளிஹள்ளா நீர்த்தேக்கத்திற்கு தேன்கனிக்கோட்டை வட்டம், பெட்டமுகிலப்பள்ளம் கிராமத்திலிருந்து மாற்றுப் பாதையில் 275 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக புதிய வழங்கு கால்வாய் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

- திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள, உப்பாறு கால்வாயுடன் பரம்பிக்குளம் – ஆழியாறு திட்ட பாசன அமைப்பு 6,060 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக ரூ.8.10 கோடி மதிப்பீட்டில் இணைக்கப்பட்டுள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

- தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம் செங்கன்பசுவன்தலாவ் கண்மாயிலிருந்து எண்டப்பட்டி, கொண்டசமணஹள்ளு கண்மாய்கள் மற்றும் இடையிலுள்ள இதர 8 கண்மாய்களுக்கும் சின்னாற்றின் வெள்ள உபரி நீரினை வழங்கும் பொருட்டு புதிய வழங்கு வாய்க்கால் அமைக்கும் பணி ரூ.10.20 கோடி மதிப்பீட்டில் முடிவுறும் தருவாயிலுள்ளது.

- தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டத்தில் கோட்டக்குடி ஆற்றுடன் கலக்கும் 18–ஆம் கால்வாயினை கோவிலங்காறு வரை நீட்டித்து, ஏரிகளுக்கு கூடுதலாக நீர் வழங்கும் பணி ரூ.52.80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

- கரூர் மாவட்டம், புதிய கட்டளை கதவணை கீழ் புறத்தில், கும்பகுழி வடிகாலின் நீரினை காவேரி ஆற்றில் திருப்பி விடுவதற்கான வாய்க்கால் அமைக்கும் பணி ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

- கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி மற்றும் ஊத்தங்கரை வட்டங்களிலுள்ள 33 ஏரிகளுக்கு நீர் வழங்கும் பொருட்டு பாரூர் ஏரியின் கிழக்கு பிரதான கால்வாயின் தொலைகல் 15.95 கி.மீ–இல் வழங்கு வாய்க்கால் அமைக்கும் பணிக்கான விரிவான ஆய்வு மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணிகள் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

- கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், மருதண்டாப்பள்ளி ஏரி மற்றும் துரை ஏரிகளுக்கு நீர் வழங்கும் பொருட்டு கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்தின் வெள்ள உபரி நீரினை இடது பிரதான கால்வாயின் மூலம் திருப்பிவிடுவதற்கான புதிய வழங்கு வாய்க்கால் அமைக்கும் பணி ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

- கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், வறட்சி பாதித்த பகுதிகள் பயனடையும் வகையில் தற்போதுள்ள எண்ணேகோல் அணைக்கட்டின் இடது மற்றும் வலது புறத்தில் புதிய கால்வாய் அமைக்கும் பணி மற்றும் பாப்பிரெட்டிபட்டி மற்றும் அரூர் வட்டங்களிலுள்ள 16 கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு வாணியார் நீர்த்தேக்கத்திட்டத்தின் இடது பிரதான கால்வாயிலிருந்து கால்வாய் அமைக்கும் பணிகளுக்கான நில அளவை மற்றும் விரிவான தல ஆய்வுப் பணிகள் ரூ.0.40 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

- தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், கஞ்சம்பட்டி ஓடையில் இருந்து இராமநாதபுரம் மாவட்டம் கமுதி மற்றும் கடலாடி வட்டங்களிலுள்ள சாயல்குடி மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு, ஒரு வெள்ள நீர்க் கால்வாய் அமைக்கும் பணி ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளது.

- சேலம் மாவட்டம், ஆனைமடுவு நீர்த்தேக்கத்தின் வெள்ள உபரி நீரை பேளூர் கிசான் வழங்கு வாய்க்காலிலிருந்து குளங்களை நிரப்புவதற்காக திருப்பி விடுவதற்கு பேளூர் அணைக்கட்டிலிருந்து ஒரு புதிய கால்வாய் மற்றும் வாழப்பாடி வட்டத்திலுள்ள குமாரசாமியூர், துக்கியம்பாளையம், மண்ணயக்கான்பட்டி மற்றும் வாழப்பாடி கிராமங்களில் ரூ.3.68 கோடி மதிப்பீட்டில் தடுப்பணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

- தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், உள்ளிக்கடை கிராமத்திலுள்ள ஆடுதுறை கால்வாய்க்கு ஊட்டுக்கால்வாய் அமைக்கும் பணி ரூ.0.45 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடையம் கிராமத்திலுள்ள ஜம்புநதி அமைப்பின் மூலம் பாசனப் பயன் பெறும் பகுதிகளுக்கு, இராமநதியின் மிகை நீரினை திருப்பி விடுவதற்கான விரிவான ஆய்வு மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணிகள் ரூ.5.40 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 3.1.6. புதிய ஏரி அமைத்தல்

**முடிவுற்ற பணிகள்**

- பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டத்திலுள்ள, தொண்டமான்துறை கிராமம் விஸ்வகுடி அருகில் கல்லார் ஓடையின் குறுக்கே 859.91 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக ரூ.33.07 கோடி மதிப்பீட்டில் புதிய ஏரி அமைக்கப்பட்டுள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

- திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கொத்தயம் கிராமம் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ரூ.11.12 கோடி மதிப்பீட்டில் புதிய ஏரி அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

### 3.1.7. செயற்கை முறையில் நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள்

- விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் மற்றும் உளுந்தூர்பேட்டை வட்டங்களில் பேரங்கியூர் மற்றும் பிடாகம் கிராமங்களுக்கிடையே பெண்ணையாற்றின்

குறுக்கே நிலத்தடி தடுப்புச் சுவர் கட்டும் பணி ரூ.12.63 கோடி மதிப்பீட்டில் நிறைவடையும் தருவாயிலுள்ளது.

## 3.2. பாசன கட்டமைப்புகள் மற்றும் பாசன அமைப்புகளைப் புனரமைத்தல்

### 3.2.1. அணைகளைப் புனரமைத்தல்

**முடிவுற்ற பணிகள்**

- அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்திலுள்ள சித்தமல்லி அணையில் புனரமைப்பு பணிகள் ரூ.14.52 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.
- தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டத்திலுள்ள வாணியாறு அணை, பாலக்கோடு வட்டத்திலுள்ள கேசரிகுளிஹள்ளா அணை மற்றும் தர்மபுரி வட்டத்திலுள்ள தொப்பையாறு அணை ஆகிய 3 அணைகளில் கட்டுமான பணிகள் மற்றும் அடைப்பான்களை இயக்கும் அமைப்புகளைப் புனரமைக்கும் பணிகள் ரூ.3.19 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.
- தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டத்திலுள்ள நாகவதி அணையில் கட்டுமான பணிகள் ரூ.0.64 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.
- தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்திலுள்ள தும்பளஹள்ளி அணையில் அடைப்பான்களை இயக்கும் அமைப்புகளின் பணிகள் ரூ.0.09 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.
- திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டத்திலுள்ள குதிரையாறு அணையில் கட்டுமான பணிகள், மின் அமைப்பு பணிகள் மற்றும் அடைப்பான்களின் பணிகள் ரூ.1.29 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டத்திலுள்ள சூளகிரி சின்னாறு அணை, ஓசூர் வட்டத்திலுள்ள கெலவரப்பள்ளி அணை ஆகிய 2 அணைகளில் கட்டுமானப் பணிகள் மற்றும் அடைப்பான்களை இயக்கும் அமைப்புகளைப் புனரமைக்கும் பணிகள் ரூ.3.08 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.
- வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்திலுள்ள மோர்தானா அணையில் புனரமைப்பு பணிகள் ரூ.4.67 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

**நடைபெற்று வரும் பணிகள்**

- கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், மேல் நீராறு அணை மற்றும் கீழ் நீராறு அணை, பொள்ளாச்சி வட்டம், ஆழியாறு அணைகளில் ரூ.14.48 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், வெலிங்டன் நீர்த்தேக்கம் மற்றும் காட்டுமன்னார்கோவில் மற்றும் சிதம்பரம் வட்டங்களில் உள்ள வீராணம் ஏரி ஆகியவற்றில் ரூ.14.49 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், சின்னாறு அணையில் ரூ.2.86 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், குடகனாறு அணையில் கட்டுமானப்பணி ரூ.4.18 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. அடைப்பான்களை புனரமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், மருதாநதி அணை மற்றும் பழனி வட்டம், பாலாறு பொருந்தலாறு அணை ஆகியவற்றில் ரூ.4.74 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், வரட்டுப்பள்ளம் அணை, கோபி வட்டம், குண்டேரிப் பள்ளம் அணை மற்றும் சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகர் அணை ஆகியவற்றில் ரூ.24.71 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், செம்பரம்பாக்கம் ஏரியில் ரூ.3.85 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், சித்தார்–I அணை மற்றும் கல்குளம் வட்டம், பெருஞ்சாணி அணை ஆகியவற்றில் ரூ.9.91 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், நொய்யல் ஆத்துப்பாளையம் அணையில், ரூ.0.715 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் துவங்கப்பட உள்ளன.
- கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், கிருஷ்ணகிரி அணை மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், பாம்பார் அணை ஆகியவற்றில் ரூ.6.83 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- பாலக்காடு மாவட்டம் (கேரளா), சித்தூர் வட்டம், பரம்பிகுளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிபள்ளம் அணைகளில் ரூ.5.36 கோடி மதிப்பீட்டில், புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், ஆனைமடுவு அணை, ஆத்தூர் வட்டம், கரியகோவில் அணை மற்றும் மேட்டூர் வட்டம், மேட்டூர் அணை ஆகியவற்றில்

ரூ.15.78 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், கீழணையில் ரூ.16.47 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், வைகை அணை, பெரியகுளம் வட்டம், மஞ்சளாறு அணை மற்றும் உத்தமபாளையம் வட்டம், சண்முகாநதி அணை ஆகியவற்றில் ரூ.9.96 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், சோத்துப்பாறை அணையை ரூ.2.01 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் துவங்கப்பட உள்ளன.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், பொன்னனியாறு அணை மற்றும் மண்ணச்சநல்லூர் வட்டம், உப்பார் (திருச்சி) அணை ஆகியவற்றில் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், மணிமுத்தாறு அணையில் ரூ.17.96 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடனா மற்றும் இராமநதி அணைகள் மற்றும் தென்காசி வட்டம், கருப்பாநதி அணை ஆகியவற்றில் ரூ.7.03 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பூண்டி நீர்த்தேக்கம், மாதவரம் வட்டம், புழல் ஏரி மற்றும் பொன்னேரி வட்டம், சோழவரம் ஏரி ஆகியவற்றில் ரூ.10.45 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் அணையில் ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி மற்றும் அமராவதி அணைகளில் ரூ.10.40 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம், கோமுகிநதி அணை மற்றும் திண்டிவனம் வட்டம், வீடூர் அணை ஆகியவற்றில் ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம், பிளவக்கல் பெரியார் மற்றும் பிளவக்கல் கோவிலார் அணைகள், விருதுநகர் வட்டம், குல்லூர்சந்தை மற்றும் ஆனைக்குட்டம் அணைகள், சாத்தூர் வட்டம், கோல்வார்பட்டி அணை மற்றும் சிவகாசி வட்டம், வெம்பக்கோட்டை அணை ஆகியவற்றில் ரூ.21.86 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**துவக்கப்படவுள்ள பணிகள்**

- கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம் சோலையாறு அணையில் ரூ.16.67 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் துவங்கப்பட உள்ளன.
- கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், சித்தார்–II அணையில் ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் துவங்கப்பட உள்ளன.
- விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், மணிமுக்தாநதி அணையில் ரூ.71.16 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் துவங்கப்பட உள்ளன.

### 3.2.2. அணைக்கட்டுகள், தடுப்பணைகள், படுகை அணைகள் மற்றும் தளமட்டச் சுவர்களைப் புனரமைத்தல்

**முடிவுற்ற பணிகள்**

- மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்திலுள்ள பள்ளப்பட்டி பழைய அணைக்கட்டு, கோட்டங்குளம் அணைக்கட்டு மற்றும் கோட்டங்குளம் கண்மாய் ஆகியன ரூ.0.70 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன.
- தேனி மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள, சீலையம்பட்டி அணைக்கட்டு மற்றும் அதன் வாய்க்கால், 325 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக, ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன.
- தேனி மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள, வீரபாண்டி அணைக்கட்டு மற்றும் அதன் வாய்க்கால், 325 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக, ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன.

- தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டத்திலுள்ள போடி கிராமம் அருகில் ஊத்தாம்பரி ஆற்றின் குறுக்கே உள்ள சாமிவாய்க்கால் அணைக்கட்டு, 66.22 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக, ரூ.0.57 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்திலுள்ள இனாம்குளத்தூர் கிராமத்தில் அரியாற்றின் குறுக்கே உள்ள இனாம்குளத்தூர் அணைக்கட்டு மற்றும் அதன் நீர் வழங்கும் ஏரிகள், ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்திலுள்ள சமுத்திரம் ஏரி, மரவனூர் ஏரி மற்றும் 7 அணைக்கட்டுகள், ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்திலுள்ள பிரட்டியூர் கிராமத்தில் அரியாற்றின் குறுக்கே உள்ள பிரட்டியூர் அணைக்கட்டு, ரூ.2.64 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்திலுள்ள இனாம்குளத்தூர் கிராமத்தில், அரியாற்றின் குறுக்கே உள்ள வடசேரி அணைக்கட்டு மற்றும் அதன் நீர் வழங்கும் ஏரிகள், 347.83 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக, ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்திலுள்ள கொத்தமங்கலம் வடிகாலின் குறுக்கே உள்ள கொத்தமங்கலம் அணைக்கட்டு, 925.48 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக, ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டத்திலுள்ள உப்பிலியாபுரம் மற்றும் கோட்டப்பாளையம் கிராமங்களில் வேடன் கலிங்கல் மற்றும் உப்பாத்துக் கலிங்கல் அணைக்கட்டு, 464 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக, ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்திலுள்ள புங்கானூர் கிராமத்தில், அரியாற்றின் குறுக்கே உள்ள புங்கானூர் அணைக்கட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால், 598.38 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக, ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்திலுள்ள அரியாவூர் கிராமத்தில், அரியாற்றின் குறுக்கே உள்ள அரியாவூர் அணைக்கட்டு, அதன் நீர் வழங்கு

ஏரிகள் மற்றும் வழங்கு வாய்க்கால்கள், 107.348 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக, ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன.

- திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்திலுள்ள ஆலத்தூர் அணைக்கட்டு, வழங்கு வாய்க்கால் மற்றும் அதன் நீர் வழங்கும் ஏரிகள், 2,467.43 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக, ரூ.0.65 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன.
- திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள தண்டரை அணைக்கட்டு, 371.40 ஏக்கர் நிலங்கள் பயனடையும் விதமாக, ரூ.0.60 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

- ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், காளிங்கராயன் அணைக்கட்டைப் புனரமைக்கும் பணி ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறையார் ஆற்றின் குறுக்கே உள்ள தடுப்பணையைப் புனரமைக்கும் பணி ரூ.6.35 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பள்ளப்பட்டி கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே உள்ள பள்ளப்பட்டி பழைய அணைக்கட்டு மற்றும் கோட்டன்குளம் அணைக்கட்டு, கொட்டாம்பட்டி கிராமத்தில் உள்ள கோட்டன்குளம் கண்மாய் உபரிநீர் வழிந்தோடி ஆகியவற்றை ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளன.
- சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சரபங்கா ஆற்றின் குறுக்கே உள்ள 13 அணைக்கட்டுகளை, ரூ.5.23 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், இரகுநாத காவேரி வாய்க்காலுக்கு நீர் வழங்கும் பொருட்டு ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் வெண்ணாற்றின் குறுக்கே உள்ள தளமட்டச் சுவரை மேம்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், தென்பெரம்பூர் கிராமத்தில், ரூ.1.95 கோடி மதிப்பீட்டில் வி.வி.ஆர். தலை மதகின் கீழ்புறம் பக்கவாட்டு தடுப்பு அமைப்புகளைப் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், பாச்சூர் மற்றும் குமாரக்குடி கிராமங்கள், பங்குனி வாய்க்காலிலுள்ள அதானி படுகை அணை

மற்றும் கூத்தூர் படுகை அணைகளை ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் மறுகட்டுமானம் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், பொட்டிபுரம், சிலமலை, சில்லமற்றத்துப்பட்டி மற்றும் தோம்புச்சேரி கிராமத்தில், ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் சுத்தகங்கை ஓடையில் எர்னான்குளம் அணைக்கட்டு, தம்பிரான்குளம் அணைக்கட்டு, அம்மாகுளம் அணைக்கட்டு, இலுப்பமரத்து அணைக்கட்டு, சென்னையகவுண்டன் அணைக்கட்டு மற்றும் போசிகவுண்டன் அணைக்கட்டு ஆகியவற்றை புனரமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.
- தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை கிராமத்தில் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் வராகநதி கால்வாயில் புது அணை, ஒட்டணை, கொடமுருட்டி அணை, பிரம்பு அணை மற்றும் முக்கவர் பிரிவணை ஆகிய அணைகளை புனரமைக்கும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.
- தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்னமனூர் அணைக்கட்டு மற்றும் அதன் வாய்க்கால் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், மார்க்காயன்கோட்டை அணைக்கட்டு மற்றும் அதன் வாய்க்கால் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், உப்புக்கோட்டை அணைக்கட்டு மற்றும் வாய்க்கால் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செவலபுரை அணைக்கட்டு மற்றும் வாய்க்கால் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், மலட்டாற்றின் குறுக்கே வீராணம் அணைக்கட்டு மறுகட்டுமானப் பணி ரூ.4.18 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

### 3.2.3. நீரொழுங்கிகளைப் புனரமைத்தல்

**முடிவுற்ற பணிகள்**

- திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், போழக்குடி கிராமத்தில் நாட்டாற்றின் குறுக்கே தொலைகல் 78/1 மைலில் அமைந்துள்ள சிறுபுலியூர் நீரொழுங்கி, 262 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் மறு கட்டுமானம் செய்யப்பட்டது.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், மேலணையில் கொள்ளிடம் ஆற்றின் வடக்கு மற்றும் தெற்கு மதகுகளின் கைமுறை இயக்க அடைப்பான்களை மின் மோட்டார்கள் மூலம் இயக்கும் வகையில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் 1,25,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் புனரமைக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்டுள்ளது.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், பெட்டவாய்த்தலை கிராமத்தில் உய்யகொண்டான் வாய்க்காலின் தலை மதகில் உள்ள மணற்போக்கி, 32,742 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம், மணமேடு கிராமம், அகன்ற காவேரி இடதுகரை தொலைகல் 97/0 மைலில் அமைந்துள்ள கொண்டம்வாரி வடிகாலின் நீரொழுங்கி, 4,964 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில் ரூ.0.90 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டது.

**நடைபெற்று வரும் பணிகள்**

- கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பழைய கொள்ளிடம் ஆற்றில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில், பேரம்பட்டு அணைக்கட்டினை ஒரு நீரொழுங்கியாக நீட்டிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- தஞ்சாவூர் மாவட்டம், கீழணையின், கொள்ளிடம் ஆற்றின் வடக்கு பகுதியில் உள்ள 1 முதல் 30 வரை உள்ள நீர்ப்போக்கிகளின் அடைப்பான்களை ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து சீரமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், எலமனூர் கிராமத்தில் உள்ள மேலணையின் காவேரி மற்றும் கொள்ளிடம் அடைப்பான்களை ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கத்திற்கு நீர் வழங்கும் ஊட்டுக் கால்வாயின் தலை மதகின் கதவு மற்றும் முத்தூர் கதவணை அடைப்பான்களை புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

### 3.2.4. கால்வாய்கள், வழங்கு வாய்க்கால்கள் மற்றும் ஆறுகளைப் புனரமைத்தல்

**முடிவுற்ற பணிகள்**

- கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள், தொலை கல் 0.00 கி.மீ முதல் 49.30 கி.மீ வரையுள்ள சமமட்டக் கால்வாய், 4,25,012 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ரூ.221.15 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டது.
- கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வாய்க்கால் மற்றும் இராதாபுரம் வாய்க்கால் மற்றும் அதன் கண்மாய்கள், 29,877 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும் வகையில் ரூ.22.50 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன.
- கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தாமரைக்குளம் கிராமத்தில் தொலைகல் 0 கி.மீ. முதல் 5/800 கி.மீ. வரையுள்ள கோட்டையாடி கால்வாய் மற்றும் தொலைகல் 5/800 கி.மீ. முதல் 6/700 கி.மீ. வரையுள்ள நாஞ்சில் நாடு புத்தனார் கால்வாய், 400 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும் வகையில், ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன.
- மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், திருமங்கலம் பிரதானக் கால்வாய் ரூ.9.57 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- மதுரை மாவட்டம், பெரியாறு பிரதானக் கால்வாய் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், வடகரையாத்தூர் கிராமம், ஜேடார்பாளையம் அணைக்கட்டின் தலைமதகில் ராஜா வாய்க்காலின் கீழ்பகுதியில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் பலப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், புதூர்வயல் வாய்க்கால் ரூ.2.47 கோடி மதிப்பீட்டில் 5,200 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும் வகையில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், காலச்சேரி கிராமம், தொலைகல் 49/1 முதல் 49/7 வரையுள்ள வெண்ணாற்றின் இருகரைகளின் சரியக்கூடிய பகுதிகள் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் கேபியான் கட்டமைப்புகள் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளது.
- தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், சக்கிலிச்சிக்குளம் மற்றும் நல்லிடைச்சேரி ஏரிகளின் வழங்கு வாய்க்கால்கள் ரூ.2.70 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

- தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோகிலாபுரம் மற்றும் உத்தமபாளையம் கிராமங்களில் உள்ள தாமரைக்குளம் வழங்கு வாய்க்கால் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் 543 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

- திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், கண்டலேறு – பூண்டி கால்வாய்க்கிடையே தொலைகல் 13.00 கி.மீ. முதல் 25.275 கி.மீ வரை சரிந்த பல்வேறு பகுதிகள் ரூ.19.88 கோடி மதிப்பீட்டில் பலப்படுத்தப்பட்டுள்ளது.

- திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள், துரிஞ்சலாற்றின் குறுக்கே அமைந்துள்ள கீரனூர் அணைக்கட்டிலிருந்து பிரிந்து திருவண்ணாமலை மற்றும் செஞ்சி வட்டங்களின் வழியாகச் செல்லும் நந்தன் வாய்க்கால் ரூ.14.31 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

- கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆழியாறு ஊட்டுக்கால்வாய் தொலைகல் 0 கி.மீ. முதல் 6.000 கி.மீ. வரை ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் ஜே. கிருஷ்ணாபுரம் கிளை கால்வாய் தொலைகல் 0 கி.மீ. முதல் 3.470 கி.மீ. வரை மற்றும் வலசுபாளையம் பகிர்மானக் கால்வாய் தொலைகல் 0 கி.மீ. முதல் 3.800 கி.மீ. வரை ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் கிராமத்திலுள்ள நரசிங்கபுரம் ராஜா வாய்க்கால் வழங்கு வாய்க்கால் ரூ.10.20 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், சமுத்திரப்பட்டி கிராமத்திலுள்ள ராஜனேரி வழங்கு வாய்க்கால் ரூ.7.42 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், பொய்கை அணைக்கு நீர் வழங்கும் வகையில் சுங்கன் ஓடையின் பக்கக் கரைகளைப் பாதுகாத்து, இரப்பையாற்றை மேம்படுத்தும் பணி ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- மதுரை மாவட்டம், பெரியாறு பிரதானக் கால்வாயின் 1 முதல் 4 வரையிலான பிரிவு வாய்க்கால்கள், 12–ஆவது பிரிவு வாய்க்கால், பெரியாறு நீட்டிப்பு கால்வாய்

மற்றும் அதன் பகிர்மானக் கால்வாய்களை ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- மதுரை மாவட்டம், வாடிப்பட்டி, மதுரை வடக்கு, மதுரை கிழக்கு மற்றும் மேலூர் வட்டங்களில் உள்ள பெரியாறு பிரதானக் கால்வாயின் 5, 6, 8, 9 மற்றும் 11–ஆவது பிரிவு வாய்க்கால்களை ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், குமாரபாளையம் வாய்க்காலில் தொலைகல் 0 மீ – 17400 மீட்டரில் பகுதி–I முதல் VI வரை உள்ள வாய்க்காலை, ரூ.8.38 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தில்லையாடி கிராமத்தில் மகிமலை ஆற்றின் வலது கரை தொலைகல் 147.860 கி.மீ–ல் உள்ள அரபி உபரி நீரொழுங்கியை மறுகட்டமைக்கும் பணி ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம், தேவநதி ஆற்றினை (உப்பனார் வடிகால்) தரப்படுத்தி, மேம்படுத்தும் பணி ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள், மேட்டூர், எடப்பாடி மற்றும் திருச்செங்கோடு வட்டங்களில் உள்ள மேட்டூர் கிழக்கு கரை கால்வாயைப் புனரமைக்கும் பணி ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், குன்னூர் கிராமம் அருகில் குன்னூர் அணைக்கட்டு வழங்கு வாய்க்காலை ரூ.8.30 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி கிராமத்தில் வைரவன் அணைக்கட்டு வழங்கு வாய்க்காலை ரூ.6.50 கோடி மதிப்பீட்டில், நவீனப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- தேனி மாவட்டம், தந்தை பெரியார் வாய்க்காலை தொலைகல் 0 மீ முதல் 12000 மீ வரை சீரமைத்து மேம்படுத்தும் பணி ரூ.5.24 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தாமரைக்குளம் கிராமத்தில் தாமரைக்குளம் வழங்கு வாய்க்காலை ரூ.4.86 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், குள்ளபுரம் கிராமத்தில் குள்ளபுரம் அணைக்கட்டு வழங்கு வாய்க்காலை ரூ.2.88 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி கிராமத்தில் மூங்கில் அணைக்கட்டு வாய்க்காலை, ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டி கிராமத்தில் நாகர்வள்ளி அணைக்கட்டு வாய்க்காலை ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், காமயகவுண்டன்பட்டி கிராமத்தில், கேசவரம் ஏரியின் கூத்தநாச்சியார் அணைக்கட்டு வழங்கு வாய்க்காலை, ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், ஆலத்தூர் கிராமத்தில் வாஞ்சியாற்றின் குறுக்கே மைல் 77/0–இல் ஆலத்தூர் நீரொழுங்கியை ரூ.0.65 கோடி மதிப்பீட்டில் மறுகட்டமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், பாலக்கரை பகுதியிலுள்ள உய்யக்கொண்டான் வாய்காலை ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் சீரமைத்து, நவீனப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வாய்க்காலை ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் மேற்பூச்சு செய்து அதன் மதகுகளை மேம்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி மற்றும் இராதாபுரம் வட்டங்களில் உள்ள வடமலையான் வாய்க்கால் மற்றும் கொடுமுடியார் அமைப்பில் உள்ள அதன் ஏரிகளை ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் சீரமைத்து மேம்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர், ஆலங்குளம் மற்றும் திருநெல்வேலி வட்டங்களிலுள்ள மானூர் வழங்கு வாய்க்காலை ரூ.2.29 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், திடியூர் கிராமத்தில் இருந்து பச்சையாறு வழிந்தோடிக்குக் கீழ்புறம் வரை செல்லும் சாலை வலது பக்க தாங்கு சுவருக்கு அருகே மழை நீர் மற்றும் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணி ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- திருநெல்வேலி மாவட்டம் மற்றும் வட்டம், பள்ளமடை ஏரி மற்றும் பள்ளிக்கோட்டை வழங்கு வாய்க்காலை ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கன்னடியன் கால்வாயின் குறுக்கே தொலைகல் 2046 மீ–இல் கல்லிடைக்குறிச்சி நகரத்தின் வடிகால் நீரை திருப்புவதற்காக ஒரு நீர்வழிந்தோடி அமைக்கும் பணி ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், தானிப்பாடி அணைக்கட்டின் வழங்கு வாய்க்காலை ரூ.0.82 கோடி மதிப்பீட்டில் சீரமைத்து மேம்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- விருதுநகர் மாவட்டம் மற்றும் வட்டம், வடமனைகுறிச்சி ஏரியின் வழிந்தோடியிலிருந்து குல்லூர்சந்தை நீர்த்தேக்கம் வரையுள்ள கௌசிகா நதியை ரூ.3.00 கோடி மதிப்பீட்டில், மறுதரப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

### 3.2.5. ஏரிகளை சீரமைத்தல்

**நிறைவடைந்த பணிகள்**

- 13–வது நிதிக் குழு மானிய நிதியுதவித் திட்டத்தின் கீழ் திண்டுக்கல், காஞ்சிபுரம், மதுரை, நாகப்பட்டினம், தேனி, திருவண்ணாமலை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 10 மாவட்டங்களில் 135 ஏரிகளை சீரமைக்கும் பணிகள் ரூ.43.70 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.
- பெரம்பலூர் மாவட்டம், உப்பாறு, நந்தியாறு மற்றும் மருதையாறு உப வடிநிலங்களில் உள்ள 14 ஏரிகள் மற்றும் 2 அணைக்கட்டுகள் மற்றும் வழங்குக் கால்வாய்கள், 2,197 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தப் பட்டுள்ளன.
- சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், செந்தாரப்பட்டி ஏரி ரூ.0.69 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது
- திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் ஆமூர் ஏரி ரூ.0.70 கோடி மதிப்பீட்டில் 989.42 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும் வகையில் புனரமைக்கப்பட்டது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், கோட்டாத்தூர் ஏரி, சாத்தனூர் ஏரி, பேராமங்கலம் ஏரி மற்றும் மகாதேவி ஏரிகள் ரூ.3.17 கோடி மதிப்பீட்டில் 937 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் புனரமைக்கப்பட்டுள்ளன.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம், மருதம்பட்டி மற்றும் வல்வேல் புத்தூர் அணைக்கட்டுகள், நாகயநல்லூர், பிடாரமங்கலம், முருங்கை ஏரிகள், 1,083 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி மற்றும் தொட்டியம் வட்டங்களில் பேரூர், நெய்வேலி, கோமங்கலம் ஆகிய ஏரிகள் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் 582 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் புனரமைக்கப்பட்டுள்ளன.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், கீரம்பூர் கிராமம், கீரம்பூர் ஏரி ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், நங்கநல்லூர் கிராமம், கோப்பம்பட்டிபுதூர் ஏரி ரூ.0.95 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், கும்பக்குடி கிராமம், கும்பக்குடி பெரிய குளம் ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், நீலயம்பட்டி கிராமம், நீலயம்பட்டி ஏரி, ரூ.0.29 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சின்னசமுத்திரம் ஏரி மற்றும் சிம்மனபுதூர் ஏரி, 332.91 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும் வகையில் ரூ.0.71 கோடி மதிப்பீட்டில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டத்தின் கீழ் சீரமைக்கப்பட்டுள்ளன.

**நடைபெற்று வரும் பணிகள்**

- திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம், கிளவரை கிராமம், தொலிக்கம்பட்டி ஏரியை ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சென்னைக்கு குடிநீர் வழங்கும் சோழவரம், நேமம், போரூர் மற்றும் அயனம்பாக்கம் ஆகிய 4 ஏரிகளை தரப்படுத்தி, புதுப்பிக்கும் பணி ரூ.130.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. போரூர் மற்றும் நேமம் ஏரிகளில் பிற பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அத்துடன் நேமம் ஏரியிலிருந்து, செம்பரம்பாக்கம் ஏரிக்கு செல்லும் உபரி நீர் செல்வழியை புனரமைத்து, தரப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

- நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் ஏரியில் ரூ.5.49 கோடி மதிப்பீட்டில் நுண்குமிழிகள் மூலம் காற்றோட்டம் உருவாக்கும் நீரில் மூழ்கவல்ல கருவியினை நிறுவும் பணி, இதற்கென சிறப்பினமாக கொள்முதல் செய்ய அமைக்கப்பட உள்ள குழுவின் ஒப்புதலுக்குப் பின் துவங்கப்படும்.

- இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மற்றும் இராமநாதபுரம் வட்டங்களில் அரியனேந்தல் ஏரி, நென்மேனி ஏரி, உரப்புலி ஏரி, சூடியூர் ஏரி, ஏனாதிகோட்டை ஏரி, காமன்கோட்டை ஏரி, கள்ளிக்கோட்டை ஏரி, கொள்ளனூர் ஏரி, பூவிளத்தூர் ஏரி, பொட்டிதட்டி ஏரி, முத்துவயல் ஏரி, செவ்வூர் ஏரி, மென்னந்தி ஏரி, வலசை ஏரி, மெய்யனேந்தல் ஏரி, வயிரவனேந்தல் ஏரி, தென்னவனூர் ஏரி, முதலூர் ஏரி, கருத்தனேந்தல் ஏரி, கும்முக்கோட்டை ஏரி, வீரவனூர் ஏரி, மஞ்சூர் ஏரி, செய்யாலூர் ஏரி, கே. கருங்குளம் ஏரி, கலரி ஏரி, எட்டி வயல் ஏரி, போகலூர் ஏரி, இலந்தை ஏரி, அச்சன்குடி ஏரி, உத்திரகோசமங்கை ஏரி, நல்லன்குடி ஏரி, பனைக்குளம் ஏரி மற்றும் மேலசீதை ஏரி ஆகியவற்றை ரூ.25.99 கோடி மதிப்பீட்டில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- இராமநாதபுரம் மாவட்டத்தில் 437 முன்னாள் ஜமீன் ஏரிகளில், 37 ஏரிகளை ரூ.9.26 கோடி மதிப்பீட்டில் சீரமைத்து, புனரமைக்கும் பணிகளுக்கான நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- தேனி மாவட்டம் மற்றும் வட்டம், கோட்டூர் கிராமம், நாராயணசமுத்திரம் ஏரி மற்றும் சீலையம்பட்டி கிராமத்தில் சிறுகுளம் ஏரி ஆகியவற்றை நவீனப்படுத்தும் பணிகள் ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

- சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, காரைக்குடி மற்றும் சிவகங்கை வட்டங்களில் வெற்றியாலங்குளம் ஏரி, வீரை பெரிய ஏரி, மும்முடிச்சான்பட்டி ஏரி, முத்துப்பட்டி ஏரி, மலைக்கண்டன் ஏரி, பெருமுடி ஏரி, கீழமேலமருங்கூர் ஏரி, பாய்குடி ஏரி, நரியன்குடி ஏரி, சடயனேரி, ஜெய்துங்கனேரி ஏரி, பெருங்குடி ஏரி, கீழமெல்லவெல்லாஞ்சி ஏரி, செங்குளம் ஏரி, ஓலைக்குடிப்பட்டி ஏரி, கண்டனேரி, நெற்புகப்பட்டி ஏரி, சாத்தரசன்பட்டி ஏரி ஆகியவற்றில் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம், சிறுவிலா ஏரியில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் ரூ.0.59 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட உள்ளன.

- வேலூர் மாவட்டம், ஆற்காடு, திருப்பத்தூர், வேலூர் மற்றும் வாணியம்பாடி வட்டங்களில் மாம்பாக்கம் ஏரி, சோரையூர் ஏரி, மழையூர் ஏரி, மேல்நெத்தபாக்கம் ஏரி, வாழபந்தல் ஏரி, அரூர் ஏரி, விளாப்பாக்கம் ஏரி, பழையனூர் ஏரி, காகங்கரை ஏரி, குரும்பேரி, இரட்சமங்கலம் ஏரி, சதுப்பேரி, தொரப்பாடி ஏரி, வேப்பம்பட்டு ஏரி, வரகூர் ஏரி, கீழ்பாடி ஏரி, அயிரமங்கலம் ஏரி, மேல்புதுப்பாக்கம் பெரிய ஏரி, மேல்புதுப்பாக்கம் ஓட்டேரி ஏரி, மேல்மணவூர் கடப்பேரி ஏரி, மாரிமணிக்குப்பம் ஏரி, குடப்பட்டு ஏரி, சின்னசமுத்திரம் ஏரி, மேல்புலம் ஏரி, நாகலேரி, சென்னலேரி, நெமிலி ஏரி, செங்குளம் ஏரி, பென்னாகர் ஏரி, தோனிமேடு ஏரி, வெம்பி ஏரி, நல்லூர் ஏரி, கோடாலி ஏரி, பாலி ஏரி, மேல்நல்லி பெரிய ஏரி மற்றும் சித்தேரி, வடுகுப்பட்டு ஏரி, கலவைப்புத்தூர் ஏரி, மேலபந்தல் ஏரி, குட்டியம் ஏரி, வரதராஜபுரம் ஏரி, வெட்டிதாங்கல் ஏரி, செங்கனவரம் ஏரி, வெள்ளாம்பி சித்தேரி, பின்னந்தாங்கல் ஏரி, நம்பாரி ஏரி, கத்தலம்பட்டு ஏரி, ஆதியானம் சித்தேரி, விளரி ஏரி மற்றும் ஆதியானம் பெரிய ஏரி ஆகியவற்றில் ரூ.20.01 கோடி மதிப்பீட்டில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், தலவநாயக்கன் ஏரியில் ரூ.0.36 கோடி மதிப்பீட்டில், செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் துவங்கப்பட உள்ளன.

## 3.3. வெள்ளத் தடுப்புப் பணிகள்

### நிறைவடைந்த பணிகள்

- மதுரை மாவட்டம், ஆனைபாப்பான்குளம் கண்மாய் மற்றும் அதன் உபரி நீர் வாய்க்காலில் வெள்ளத் தடுப்புப் பணிகள் மற்றும் நிரந்தர சீரமைப்புப் பணிகள் ரூ.11.00 கோடி மதிப்பீட்டில் மதுரை மாவட்டம், திருமங்கலம் நகரத்தில் முடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், திருமங்கலம் நகரம் வெள்ளப் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளது.

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மேலணையின் கீழ்புறம், காவேரி ஆற்றின் வலது கரையைப் பாதுகாக்கும் பணி ரூ.1.11 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

- மதுரவாயலில் இருந்து கூவம் வரை மாற்றுக் கால்வாய் அமைக்கும் பணி மற்றும் அரும்பாக்கம் – விருகம்பாக்கம் வடிகாலை மேம்படுத்தும் பணி ரூ.108.27 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்டுள்ளது.

- சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில், வடக்கு பக்கிங்காம் கால்வாயை மேம்படுத்தும் பணி ரூ.117.19 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்டுள்ளது.

- திருவள்ளூர் மாவட்டம், போரூர் ஏரியின் உபரி நீர் வடிகாலை மேம்படுத்தும் பணி ரூ.49.92 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்டுள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

- காஞ்சிபுரம் மாவட்டம், வீரங்கால் ஓடை மற்றும் வேளச்சேரி ஏரியின் குறுக்கு வழி மாற்று வடிகாலை மேம்படுத்தும் பணி ரூ.112.24 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் முன்னேற்றத்தில் உள்ளது.

## 3.4. கடலரிப்புத் தடுப்புப் பணிகள்

**நடைபெற்று வரும் பணிகள்**

- கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், மண்டைக்காடு புதூரில் தூண்டில் வளைவு ரூ.7.82 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு சுற்றுச்சூழல் தடையின்மை சான்று பெறுவதற்கான பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- தூத்துக்குடி மாவட்டம், வேம்பார், வீரபாண்டிபட்டினம், பெரிய தாழை, கல்லாமொழி, கீழ வைப்பார் ஆகிய இடங்களில் ரூ.69.49 கோடி மதிப்பீட்டில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைப்பதற்கு, சுற்றுச்சூழல் தடையின்மை சான்று பெறுவதற்கான பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், எர்ணாவூர் குப்பம் முதல் எண்ணூர் வரை தொலைகல் 15/200 கி.மீ முதல் 19/000 கி.மீ வரை கடலோர பகுதியில் ரூ.31.82 கோடி மதிப்பீட்டில் 10 தூண்டில் வளைவுகள் அமைப்பதற்கு, சுற்றுச்சூழல் தடையின்மை சான்று பெறுவதற்கான பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 3.5. சாலைகள் அமைத்தல் மற்றும் பாலங்கள் கட்டுதல்

**நிறைவடைந்த பணிகள்**

- அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அழகிய மணவாளம் கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றின் இடது கரையினை மேலராமநல்லூர் கிராமத்துடன் இணைக்கும் பொருட்டு தொலைகல் (கி.மீ.45/5)–ல் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி ரூ.48.00 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

- இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகரில் வைகையாற்றின் வலதுபுறக் கரையில் சேவைச் சாலை அமைக்கும் பணி ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

- திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், சோரஞ்சேரி கிராமத்தில் கூவம் ஆற்றின் குறுக்கே ஒரு தரைப்பாலம் அமைக்கும் பணி ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

- சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், டாக்டர். இராதாகிருஷ்ணன் நகரிலுள்ள குடியிருப்பு பகுதிகளை இணைக்கும் பொருட்டு வடக்கு பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் இருவழிப் பாலம் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம், வாணியாறு நீர்தேக்கத்திட்டத்தின் இடது மற்றும் வலது பிரதான கால்வாய்களிலுள்ள ஈப்பு பாதைக்கு தார் சாலை அமைக்கும் பணி ரூ. 1.40 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், பரமன்கேணி கிராமம், பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் ஒருவழிப் பாலம் மறுகட்டுமானம் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் காளிமார் பாலத்திலிருந்து சைமன் காலனி பாலம் வரை தார்சாலை, தடுப்புச்சுவர் மற்றும் பாலம் கட்டும் பணி ரூ.2.94 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், குளச்சல் கிராமம், பத்தரை அருகே ரூ.0.64 கோடி மதிப்பீட்டில் பாம்பூரி வாய்க்காலின் குறுக்கே உள்ள பாலத்தை மறுகட்டுமானம் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், வடகரை அணைக்கட்டின் கீழ்ப்புறம் ரூ.0.95 கோடி மதிப்பீட்டில் தெற்காற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், வெங்கடசமுத்திரம் கிராமம், தெற்காற்றின் குறுக்கே ரூ.0.90 கோடி மதிப்பீட்டில் தரைப்பாலம் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், பெருமனாடு கிராமம், பெருமனாடு குளத்தின் உபரி நீர் வாரியின் குறுக்கே ரூ.0.28 கோடி மதிப்பீட்டில் தரைப்பாலம் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், வைகை ஆற்றின் இடதுபுறத்தில் ரூ.4.03 கோடி மதிப்பீட்டில் சேவைச்சாலை அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை கிராமம், ஆடு பாலம் அருகே ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் வராகநதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பூண்டி கிராமம், சத்தியமூர்த்தி சாகர் அணையிலுள்ள அணுகுச் சாலையினை ரூ.1.31 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**3.6. கட்டடங்கள் மற்றும் தொடர்புடைய உள்கட்டடைப்பு பணிகள்**

**நடைபெற்று வரும் பணிகள்**

- சென்னை மாவட்டம், திருவல்லிக்கேணி வட்டம், சேப்பாக்கத்தில் உள்ள கூவம் தெற்கு கரையில் உள்ள ஓட்டுநர் குடியிருப்பில் ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் ஓட்டு மேற்கூரையினை கற்காரை மேற்கூரையாக மாற்றும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- பரம்பிக்குளம் அணைப்பகுதியிலுள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் குடியிருப்பில் ரூ.0.30 கோடி மதிப்பீட்டில் கல்நார் மேற்கூரையினை, கற்காரை மேற்கூரையாக மாற்றும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- இடுக்கி மாவட்டம் (கேரளா மாநிலம்), தேக்கடியில் இரண்டாவது ஓய்வு கூடத்தை ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி வனத்துறையின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் துவங்கப்படும்.
- மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், சருகனியாறு வடிநில கோட்டம், மானாமதுரை உபகோட்டத்திற்கு உட்பட்ட விரகனூர் நீரொழுங்கிப் பகுதியிலுள்ள அலுவலக கட்டடம் மற்றும் ஆய்வுமாளிகையினை ரூ.0.15 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
- நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், தும்மன்குறிச்சி கிராமம், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அமைந்துள்ள, சரபங்கா வடிநில கோட்டத்திற்கான உபகோட்ட அலுவலகம் மற்றும் அதன் பிரிவு அலுவலகங்கள் கட்டும் பணி ரூ.0.28 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமாரபாளையம், மேட்டூர் கால்வாய் பிரிவிற்கான பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ரூ.0.07 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் வட்டம், பொதுப்பணித்துறை வளாகத்தில் அமைந்துள்ள திட்டம் மற்றும் வடிவமைப்பு அலுவலகத்திற்கு உபகோட்ட

அலுவலகம் மற்றும் பிரிவு அலுவலகங்கள் கட்டும் பணி ரூ.0.28 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

- சிவகங்கை மாவட்டம், இளையான்குடி, பொதுப்பணித்துறை வளாகத்தில் அமைந்துள்ள கோட்டக்கரையாறு உபகோட்டம் மற்றும் இரண்டு பிரிவு அலுவலக கட்டடங்களை சீரமைக்கும் பணி ரூ.0.15 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றம், பொதுப்பணித்துறை வளாகத்தில் பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ரூ.0.07 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகரம், கொசஸ்தலையாறு வடிநில கோட்ட அலுவலக கட்டடத்தை சீரமைக்கும் பணி ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

### 3.7. பூங்காக்களை மேம்படுத்துதல்

**நடைபெற்று வரும் பணிகள்**

- சேலம் மாவட்டம், மேட்டூர் அணையின் கீழ்புறம், இடது கரையோரம் அமைந்துள்ள பூங்காவின் பிரதான நுழைவு வாயிலினை புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

## 4.0. தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் (TN IAMWARM Project)

உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை வாரியம், கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகிய 7 துறைகளும் நீர்வள ஆதாரத்துறையுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டன. நீர் நிலைகளை சீர்செய்து, ஏரிப்பாசன முறையை நவீனமாக்குதல் மற்றும் புனரமைத்தல், வேளாண்மையை தீவிரப்படுத்துதல், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்கள் இத்திட்டத்தில் நிறைவு செய்யப்பட்டன. 2007–இல் துவங்கப்பட்ட இத்திட்டம், ஜூன் 2015–இல் வெற்றிகரமாக நிறைவடைந்தது. இத்திட்டத்தின் மூலம் 26 மாவட்டங்களில், 61 உப வடிநிலங்களில், 5,009 ஏரிகளில் நவீனமாக்குதல், புனரமைத்தல் மற்றும் நீர் மேலாண்மைப் பணிகள் ரூ.2820.93 கோடி செலவினத்தில், 6.69 இலட்சம் எக்டேர் பாசனபரப்பில் மேற்கொள்ளப்பட்டு, அதன் மூலம் சுமார் 5 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

## 4.1. நீர்வள நிலவளத் திட்டம் – II

வெற்றிகரமாக நிறைவடைந்த நீர்வள நிலவளத் திட்டம், அதன் தொடர் திட்டமாக நீர்வள நிலவளத் திட்டம்–II-னை செயல்படுத்த வழிவகுத்துள்ளது. ரூ.2,950 கோடி மதிப்பீட்டில், 29 மாவட்டங்களில் 66 உபவடி நிலங்களிலுள்ள, 5.43 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்புகள் பயன்பெறும் வகையில், 2016–ஆம் ஆண்டு முதல் 7 ஆண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டமானது நீர்வள ஆதாரத்துறை மற்றும் 7 துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் ரூ.2,194 கோடி மதிப்பீட்டில் நீர்வள ஆதாரத்துறையின் மூலம் 4,778 ஏரிகள், 477 அணைக்கட்டுகள், தடுப்பு அணைகள் கட்டுதல், ஏரியின் நீர் பரப்பு பகுதியில் செயற்கை நீர் செறிவூட்டும் கிணறுகளை அமைத்தல், காவிரி டெல்டா மற்றும் பிற உபவடிநிலங்களில் உள்ள வடிகால் மற்றும் பாசன கால்வாய்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

## 5.0. காவேரி கழிமுகப்பகுதியில் பருவநிலை மாறுதல்களை தழுவும் திட்டம்

காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதல்களை தழுவும் திட்டப் பணிகள், ரூ.1,560 கோடி திட்ட மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) கடனுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், ஆசிய வளர்ச்சி வங்கியின் பங்களிப்பு ரூ.1,092 கோடியாகவும், மாநிலத்தின் பங்களிப்பு ரூ.468.00 கோடியாகவும் இருக்கும். இத்திட்டத்தின் முதற்கட்டமாக, காவேரி கழிமுகப் பகுதியிலுள்ள கீழ்வெண்ணாறு அமைப்பிலுள்ள, பின்வரும் ஆறுகள் / வடிகால்களில் பணிகள் ''தனித்திட்டப் பணியாக'' மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. அடப்பாறு
2. அரிச்சந்திரா நதி
3. பாண்டவையாறு
4. வெள்ளையாறு
5. வளவனாறு வடிகால்
6. வேதாரண்யம் கால்வாய்
7. மின், இயந்திரம் மற்றும் கட்டுமானப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு உந்து இயந்திரங்களை வடிவமைத்து, வழங்கி, பொருத்தி, சரிபார்த்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

இப்பணிகளை துவங்குவதற்காக ரூ.960.66 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியுடனான திட்ட ஒப்பந்தம் மற்றும் கடன் ஒப்பந்தம் 14.07.2016 அன்று கையொப்பமிடப்பட்டுள்ளது. மேலும், வெள்ளையாறு மற்றும் பாண்டவையாறு ஆகிய இரு ஆறுகளில் ரூ.278.97 கோடி மதிப்பீட்டில்

பணிகள் துவங்கப்பட்டுள்ளன. முறையான ஒப்பந்தப்புள்ளி இறுதிசெய்யப்பட்ட பின்பு மீதமுள்ள, 5 பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

**6.0. திறன்மிகு பாசன நீர் மேலாண்மையை உறுதிப்படுத்துவதற்காக காவேரி வடிநிலப் பகுதிகளிலுள்ள பாசன அமைப்புகளை மேம்படுத்தி, புனரமைக்கும் திட்டம்**

காவேரி வடிநிலத்தில் பாசன அமைப்புகளை மேம்படுத்தி, புனரமைத்து திறன்மிகு பாசன நீர் மேலாண்மையினை உறுதி செய்யும் வகையில், ரூ.11,420 கோடி மதிப்பீட்டில், தயாரிக்கப்பட்ட திட்ட முதனிலை அறிக்கைக்கு மத்திய நீர்க்குழுமம் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, கல்லணைக் கால்வாய் உப வடிநிலக் கட்டமைப்புகளை மேம்படுத்தி, புனரமைக்கும் பணியை ரூ.2,610 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய நீர்க்குழுமத்தின் வழிகாட்டுதலின்படி இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கையினை தயாரித்தல் மற்றும் தொடர்புடைய பணிகளை மேற்கொள்வதற்கான கலந்தறிதல் பணிகள் திருவாளர்கள் வாப்கோஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு இதற்காக, கலந்தறிதல் கட்டணமாக ரூ.10.00 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு, மத்திய நீர்க் குழுமத்தால் 05.07.2016 அன்று ரூ.2,298.75 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவியினை பெறுவதற்கான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**7.0. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்பு**

- தாமிரபரணி ஆற்றை கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைப்பதற்காக வெள்ளாங்குழி கிராமத்தின் அருகில் கன்னடியன் கால்வாயின் தொலைகல் 6.5 கி.மீ–இலிருந்து திசையன்விளை அருகிலுள்ள எம்.எல்.தேரி வரை திருத்திய நேர்ப்பாட்டின்படி 75.175 கி.மீ. நீளத்திற்கு வினாடிக்கு 3,200 க.அடி நீரைக் கடத்தும் திறன்கொண்ட ஒரு புதிய வெள்ளநீர்க் கால்வாய் அமைக்கும் பணி முன்னேற்றத்திலுள்ளது.
- மத்திய நீர்வளக் குழுமம், இத்திட்டத்திற்கான ரூ.872.45 கோடி (2014–2015 விலைவிகிதப்படி) திருத்திய விலை மதிப்பீட்டிற்கு 07.05.2015 அன்று ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் 28.05.2015 அன்று இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதி அளித்துள்ளது. மேற்குறிப்பிட்ட ஒப்புதல்கள் 16.07.2015 அன்று நடைபெற்ற பெரிய மற்றும் நடுத்தர பாசனம், வெள்ளத்தடுப்பு மற்றும் பன்முகத் திட்டங்களுக்கான ஆலோசனைக் குழுவின் 126–ஆவது கூட்டத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில்

19.04.2016 அன்று மத்திய அரசின் நீர்வள ஆதாரம், நதிகள் மேம்பாடு மற்றும் கங்கை சீரமைப்பு அமைச்சகம், ரூ.872.45 கோடிக்கு முதலீட்டு அனுமதி அளித்துள்ளதன் மூலம் விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற வழிவகுத்துள்ளது.

## 7.1. அணைகள் மற்றும் நீர் நிலைகளைத் தூர்வாருதல்

நாட்டில் நீர்த்தேக்கங்களைத் தூர்வாரும் பணி பரவலாக இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** அணைகளில் அதிக அளவில் சேர்ந்துள்ள வண்டல் படிவுகளை அகற்றுவதற்கும் அணைகளின் முழு கொள்திறனை மீளப்பெறுவதற்கும் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். இதற்காக, மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசனப்பயன் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.1.1. வைகை, பேச்சிப்பாறை, மேட்டூர், அமராவதி நீர்த்தேக்கங்கள் மற்றும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டினைத் தூர்வாருதல்

இத்திட்டப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் விரைவான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்தல் ஆகிய பணிகள், திருவாளர்கள் வாப்கோஸ் நிறுவனத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்திலுள்ளது. மேலும், தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் ஆணைப்படி, ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டில் தூர்வாரும் பணிகள் ரூ.5.93 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 7.1.2. பரப்பலாறு நீர்த்தேக்கத்தைத் தூர்வாருதல்

பரப்பலாறு நீர்த்தேக்கத்தை ரூ.19.50 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி, அதன் முழு கொள்திறனை மீளப்பெறுவதற்கு வனத்துறையின் அனுமதி பெறப்பட்டப்பின் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### 7.1.3. வீராணம் ஏரியைத் தூர்வாருதல்

வீராணம் ஏரியைத் தூர்வாரி அதன் முழு கொள்திறனான 1,465 மில்லியன் கன அடியை மீளப்பெறுவதற்கும், வடவாறு வாய்க்காலின் நீர் கடத்தும் திறனை அதிகரிக்க புனரமைப்பு பணிகளும் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்திலுள்ளன.

## 8.0. மாநில  நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்

நில மேற்பரப்பு நீரின் அளவு குறைந்துவிட்ட நிலையில், நிலத்தடி நீரின் தேவை அதிகரித்துவருகிறது. நிலத்தடி நீரானது மீளப் பெறக்கூடிய வளத்தினை கொடுக்கும் தன்மையை கொண்டது. நீர்வள ஆதாரத்துறையினை சேர்ந்த மாநில நில மற்றும்

மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம் சார்பாக பல்வேறு வகையான நிலநீர் ஆய்வுகளை, அதாவது, நிலத்தடி நீர் இருப்பு, நிலத்தடி நீர் மட்டம், நீரின் தன்மை மற்றும் மேற்பரப்பு நீரின் அளவு போன்றவற்றை அவ்வப்போது மேற்கொண்டு வருகிறது. நிலத்தடி நீர் உபயோகம் கடந்த மார்ச் மாதம் **2009–**ஆம் ஆண்டு நிலவரப்படி, **80** விழுக்காடுக்கு மேல் பயன்படுத்தப்பட்டுள்ள நிலையில், மீதம் இருக்கும் நிலத்தடி நீரை மிகவும் சீரிய முறையில் பராமரித்தல் இன்றியமையாததாகும்.அதற்காக மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டுள்ளது.

- நிலத்தடி நீர் இருப்பினை மதிப்பீடு செய்யவும், வறட்சி குறித்து ஆய்வு செய்யவும், தமிழ்நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுக் கிணறுகளிலிருந்து (Observation Wells) நிலநீர் மட்டம் தொடர்ந்து கண்காணிப்பட்டது.
- பருவமழைக்கு முன்பும், பின்பும் நீர் மாதிரிகள் சேகரித்து ஆய்வு செய்து நிலத்தடி நீரின் பயன்பாட்டு தன்மை குறித்து அறிக்கை தயார் செய்யப்பட்டது.
- மாநிலத்தில் அனைத்து ஆற்றுப் படுகைகளிலுள்ள வெவ்வேறு மண் பரிமாணங்களில் நீரியல் சம்பந்தமான விவரங்கள் சேகரித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.
- நீரோட்டம் (Run-off) மற்றும் நீர்கசிவுக்கான (Seepage) தொடர்புகளை அறிந்து கொள்ளும் வண்ணம், சுய பதிவு செய்யும் மழைநீர் நிலையங்கள், தானியங்கி மழைநீர் நிலையங்கள் மற்றும் முழு வானிலை நிலையங்கள் வாயிலாக மழைநீர் விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
- நிலத்தடி நீர்அதிநுகர்வு மற்றும் மாசுபடுவதை தடுத்தல் சம்மந்தமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது .
- செயற்கை முறையில் நீர் செறிவூட்டுதல் மற்றும் மழை நீர் சேகரித்தல் போன்ற உத்திகளின் மூலம் நிலத்தடி நீர் மட்டம் அதிகப்படுத்தப்பட்டது.
- தமிழகத்தின் நிலத்தடி நீரை சீரிய முறையில் சிக்கனமாக பயன்படுத்த மற்ற துறைகளுடன் இணைந்து செயல்படுதல் மற்றும் அத்துறைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்கப்பட்டது.
- பூமிக்கடியில் உள்ள பாறைகளின் அமைப்பு, நிலத்தடி நீரின் மட்டம் மற்றும் தன்மை , நீர் சுரக்கும் விதம் மற்றும் நில நீரியல் காரணிகளை கண்டறிய ஆழ்துளை கிணறு அமைத்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.
- பொதுமக்கள், விவசாயிகள், அரசுத் துறைகள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு கிணறுகள் அமைக்க புவியியல், நிலநீரியல், பூகோளபௌதீக

அடிப்படையில் இடம் தேர்வு செய்ய ஆலோசனை குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்டது.

- மித அபாயகரமான மற்றும் பாதுகாப்பு ஒன்றியங்களில் நீர் சார்ந்த மற்றும் நீர் சாரா தொழிற்சாலை மற்றும் நிறுவனங்களுக்கு நிலத்தடி நீர் எடுக்க தடையில்லாச் சான்று வழங்கப்பட்டு வருகிறது.
- கடற்கரையோர நன்னீர் தாங்கிகளில் கடல் நீர் ஊடுருவலை மதிப்பிடும் சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.
- தேசிய மற்றும் மாநில நீர் கொள்கைகள் வகுக்க உறுதுணையாக இருத்தல்.
- நிலத்தடிநீரினை பயன்படுத்தும் துறைகள் மற்றும் நிலத்தடி நீரினைப் பயன்படுத்துவோருக்கு நிலத்தடிநீர் சம்பந்தமான விவரங்களுடன் கூடிய அறிக்கைகள் காலாண்டிற்கு ஒரு முறை அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டது.
- இத்துறையின் பல்வேறு செயல்பாடுகளின் மூலமாக சேகரிக்கப்பட்ட நீரியல், நீர்வானியல், புவியியல் மற்றும் பூகோளபெளதீகம் தகவல்களை அரசுத் துறைகள், தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியோருக்கு கட்டண அடிப்படையில் வழங்கப்பட்டது.

## 8.1. நுண்ணிய அளவில் தமிழகத்தின் நிலத்தடி நீர் மதிப்பீட்டினை கணக்கீடு செய்தல்

- தமிழகத்தின் நிலநீர் இருப்பு கணப்பீட்டினை நுண்ணிய அளவில் மேற்கொள்ள ஏதுவாக தற்போது குறுவட்டங்களின் அடிப்படையில் (Firka) மார்ச் 2011–ஆம் ஆண்டிற்கான நிலத்தடி நீர் வகைப்படுத்தும் பணிமுடிவடைந்துள்ளது. குறுவட்டங்களின் அடிப்படையில் (Firka) 2013–ஆம் ஆண்டிற்கான நிலத்தடிநீர் வகைப்படுத்தும் பணிக்காக அடிப்படை விவரங்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு முடிவுற்று ஏற்கதக்க ஏதுவான பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

## 8.2. கடல் நீர் ஊடுருவுதலை கண்காணிக்கும் அமைப்பு

- நிலத்தடி நீர் மட்டத்தை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்யும் வகையில் தமிழ்நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுக் கிணறுகளிலிருந்து (Observation Wells) நிலநீர் மட்டம் தொடர்ந்து கண்காணிப்பட்டு வருகிறது. மேலும், கடலோரப் பகுதிகளில் 284 ஆய்வுக் கிணறுகள் மூலம் கடல் நீர் ஊடுருவுதலை அறிய மாதாந்திர நீர் மட்டம் கவனிக்கும் பணியும், வருடத்திற்கு இருமுறை நீர் மாதிரிகள் சேகரித்து ஆய்வு செய்யும் பணியும் நடைபெற்றுவருகின்றன.

கடல் நீர் ஊடுருவுதல் அளவு மற்றும்அதன் விகிதம் மாதாந்திர அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு, அவற்றின் விளைவு அடிப்படையில் நிலத்தடி நீர் திட்டங்கள் வகுக்க மற்றும் கடல் நீர் ஊடுருவுதலை கட்டுப்படுத்தவும், ஒழுங்குமுறை நடவடிக்கைகள் எடுக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## 8.3. நீர் தாங்கிகளின் வரைபடம் தயாரித்தல் மற்றும் நீர் தாங்கிகளை மேலாண்மை செய்தல்

- இப்பணியின் முதற்கட்ட ஆய்வாக 9 நீர் தாங்கிகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் அமைப்புகளை ஆய்வு செய்ய எடுத்து கொள்ளப்பட்டது. பின்னர் நீர்த்தாங்கிகளின் மேலாண்மை திட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு இப்பணி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி புவியியல், பூகோளபௌதீகம் மற்றும் நிலநீரியல் போன்ற ஆய்வுகள் வழக்கமான பணியாக எடுத்து கொள்ளப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டு அதன் ஆய்வு குறிப்புகள் அறிக்கையாக தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 9.0. நீரியல் மற்றும் நீர் நிலையியல் ஆய்வு நிறுவனம்

நீர்வள ஆதாரத்துறையின் வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதார அமைப்பின் கீழ், பூண்டியை தலைமையிடமாகக் கொண்டு நீரியல் மற்றும் நீர் நிலையியல் ஆய்வு நிறுவனம் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் கீழ் உள்ள நீரியல் கோட்டத்தில் நீர்ப்பாசன மாதிரி ஆய்வுகள், கடற்கரை மாறுதல்களை கண்காணித்தல் மற்றும் கடலோரப் பாதுகாப்புப் பணிகளை ஆய்வு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பொள்ளாச்சியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் நீர்பிரிகை மேலாண்மை வாரியக் கோட்டத்தில் தமிழ்நாட்டில் தெரிவு செய்யப்பட்ட நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏரிகளின் மண்படிவு மற்றும் அதனால் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவில் ஏற்படும் மாறுதல்கள் பற்றி அறியும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. 2015–2016–ஆம் ஆண்டில் பின்வரும் 11 அணைகளில் மண் படிவுகளை ஆராய்வதற்கு அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.0.45 கோடி மதிப்பீட்டில் பணிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

1. கீழ் நீராறு அணை (கோயம்புத்தூர் மாவட்டம்)
2. காடம்பாறை அணை (கோயம்புத்தூர் மாவட்டம்)
3. மரவக்கண்டி அணை (நீலகிரி மாவட்டம்)
4. காமராஜசாகர் அணை (நீலகிரி மாவட்டம்)
5. சின்னாறு அணை (தருமபுரி மாவட்டம்)
6. கரியக்கோவில் அணை (சேலம் மாவட்டம்)

7. சோத்துப்பாறை அணை (தேனி மாவட்டம்)
8. குல்லூர்சந்தை நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)
9. இராமநதி நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)
10. கருப்பாநதி நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)
11. குண்டாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)

## 10.0. நீர் ஆய்வு நிறுவனம்

### நுண்ணிய அளவிலான ஆய்வுகள்

நீர் ஆய்வு நிறுவனம் தமிழகத்தில் உள்ள 34 ஆறுகளை, 17 பெரிய ஆற்றுப்படுகைகளாக வகைப்படுத்தியுள்ளது. இதுவரை, காவேரி ஆற்றுப்படுகை நீங்கலாக, 16 ஆற்றுப்படுகைகளில் நுண்ணிய அளவிலான ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வு அறிக்கைகள் நீர்வள ஆதாரத்துறையின் அனைத்து மண்டலத் தலைமைப் பொறியாளர்களுக்கும் இதர துறை சார்ந்த அலுவலகங்களுக்கும் தகவலுக்காக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆய்வுகளை தற்கால விவரங்கள் கொண்டு மேம்படுத்துவதற்கான மறு ஆய்வு பணிகள் 2010–ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, கோதையாறு, வைப்பாறு, வைகை, வெள்ளாறு, பாலாறு மற்றும் தாமிரபரணி ஆகிய ஆற்றுப்படுகைகளில் மேற்கொள்ளப்பட்டு ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை அனைத்து நீர்வளத்துறை மற்றும் இதர துறை சார்ந்த அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பெண்ணையாறு ஆற்றுப்படுகைக்கான நுண்ணிய அளவிலான மறு ஆய்வுப் பணிகள் 2015–2016–இல் மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளது.

### தொலையுணர்வு மற்றும் பூகோள தகவல் அமைப்பு செயல்பாடுகள்

- இந்திய பிரதமரின் முன்னிலையில் “ஆளுமை மற்றும் வளர்ச்சியில் நுணுக்கம் மற்றும் பயன்பாடு சார்ந்த விண்வெளி தொழில்நுட்ப மேம்படுத்துதல்” குறித்து 07.09.2015–இல் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் தமிழ்நாடு சார்பாக நீர்வள மேலாண்மையின் பங்கு குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

- காவேரி ஆற்றுப்படுகைக்காக வெவ்வேறு காலக்கட்டத்தில் பெறப்பட்ட செயற்கைக்கோள் புகைப்பட உதவியுடன் 2015–ஆம் ஆண்டுக்கான பருவகாலவாரியான மேற்பரப்பு நீர் மற்றும் பயிர் சாகுபடி பரப்பளவு கணக்கீடு தயார் செய்யப்பட்டு காவேரி தொழில்நுட்ப குழு மற்றும் பன்மாநில நதி நீர் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- பாலாறு மற்றும் பெண்ணையாறு ஆற்றுப் படுகைகளுக்காக நுண்ணிய அளவிலான மறு ஆய்வுக்குத் தேவையான அனைத்து வரைபடங்கள் செயற்கைக் கோள் புகைப்படம் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளன.

- செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைப்பு செய்தல் திட்டத்தின் கீழ், வடிகால்கள் மற்றும் தனித்தன்மை குறியீட்டு எண்ணுடன் கூடிய ஏரிகளின் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு, நீர்வள ஆதாரத்துறையின் உபவடிநிலக் கோட்டங்களுக்கு அளிக்கப்பட்டுவருகிறது.

- தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத்துறையின் கீழ் இயங்கி வருகின்ற தமிழ்நாடு புவியியல் அமைப்பு மையத்திற்கு (TNGIS) தனித் தன்மை குறியீட்டு எண் வழங்கப்பட்ட நீர்வள ஆதாரத் துறையின் அனைத்து ஏரிகள், ஆற்றுப் படுகைகள் மற்றும் உப ஆற்றுப்படுகைக்கான புவி தகவலமைப்பு விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

- நீர்வள ஆதாரத்துறையின் அனைத்து மண்டலங்களுக்கும் மண்டல வாரியான நீர்வள ஆதார விவரப் படங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் II–க்கான 66 உப வடிநிலங்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிப்பதற்கு தேவையான நிர்வாக எல்லை, புவியியல், நீர் போக்கி, நிலப்பயன்பாடு மற்றும் மண் அமைப்பு போன்ற வரைபடங்கள் தயாரித்து கள அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

## 11.0. பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்

நீர்ப்பாசன அமைப்புகளின் திறன் மேம்பாட்டின் மூலம் பாசன வேளாண்மையில் உற்பத்தியை பெருக்குவதற்கான பயிற்சிகளை வழங்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், தமிழக அரசால் 1984–ஆம் ஆண்டு திருச்சியில் நிறுவப்பட்டது. நீர்வள ஆதாரத்துறை, வேளாண்மைப் பொறியியல்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை ஆகிய துறைகளின் இளநிலை / இடைநிலை / முதுநிலை அலுவலர்களுக்கும், நீர்வள ஆதாரத்துறையின் களப்பணியாளர்களுக்கும் இப்பயிற்சி நிலையம் பாசன மேலாண்மை மற்றும் இது தொடர்பான பொருள்களில் பயிற்சி வழங்கி வருகின்றது. இவை தவிர, நீர் நிர்வாகம் மற்றும் பங்கேற்புப் பாசன மேலாண்மைப் பயிற்சிகள் விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது.

2015–16–ஆம் ஆண்டில் பாசன அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு, பாசன மேலாண்மைக்கான சிறந்த தகவல் பரிமாற்றத் திறன், பருவ நிலை மாறுதலை எதிர் கொள்ளுதல், பாசன மேலாண்மைக்காக மக்கள் தொடர்பு, கடலோர மேலாண்மை மற்றும் கடல் நீர் ஊடுருவுதலைத் தடுத்தல், அணைப் பாதுகாப்பு மற்றும் அணைகளில் கருவிகள் பொருத்துதல் ஆகிய பயிற்சிகள் அலுவலர்களுக்கு இந்நிலையத்தின் மூலம் நடத்தப்பட்டன. மேலும், அமைச்சு பணியாளர்களுக்கு அடிப்படை கணினி (Basic Windows) பயிற்சியும் நீர்வள ஆதாரம், வேளாண்மைப்

பொறியியல், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களுக்கு, பூகோள தகவல் அமைப்பு, ஆட்டோ லிஸ்ப்புடன் கூடிய ஆட்டோ கியாட், இரு பரிமாண அனிமேஷன், போட்டோ ஷாப் ஆகிய மேம்பட்ட பயிற்சிகள் நடத்தப்பட்டன. நீர் மேலாண்மை, நவீன உத்திகள், பயிர் சாகுபடி முறைகள், இயந்திரங்கள் பயன்பாடு, மண்டலங்களில் பின்பற்றப்படும் பங்கேற்பு பாசன மேலாண்மை ஆகியவற்றில் ஆழ்ந்த அனுபவம் பெறும் பொருட்டு மாநிலத்திற்குள்ளேயும் வெளியேயும் பயிற்சி சுற்றுலாக்கள் நடத்தப்பட்டன.

மேற்படி பயிற்சிகள் தவிர, இப்பயிற்சி நிலையத்தில், பாசன வேளாண்மைக்கான உயிரியல் இடுபொருட்கள், நீர்நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், கடற்கரை நீரியல் மற்றும் கடல் நீர் ஊடுருவுதலைத் தடுத்தல், அணைப்பாதுகாப்பு மற்றும் புனரமைத்தல், பாசன மேலாண்மையின் சமுதாயப் பரிமாணங்கள், நுண்ணீர்ப் பாசனம், நீர்வள ஆதாரத்திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 ஆகிய தலைப்புகளில் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

வருவாய் நிர்வாகத் துறையின் நிதியுதவியின் கீழ் பேரிடர் மேலாண்மை பயிற்சி, மனஅழுத்த மேலாண்மை பயிற்சி, 'நீர்வள நிலவள' திட்டத்தின் கட்டம் III மற்றும் IV-ன் உப வடிநிலப்பகுதி நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் தகுதி வாய்ந்த அலுவலர்களுக்கு தொடர் பயிற்சிப்பட்டறைகளும் நடத்தப்பட்டுள்ளன. 'நீர்வள நிலவள' திட்ட பயிற்சி நிபுணர்கள் மற்றும் கள ஒருங்கிணைப்பாளர்களுக்கான அடிப்படை மற்றும் தொடர் பயிற்சிப் பட்டறைகளும் இப்பயிற்சி நிலையத்தின் மூலம் நடத்தப்பட்டுவருகிறது. நார்வே நாட்டு தூதரக நிதி உதவியின் மூலம், ஈரோடு மாவட்டம், காளிங்கராயன் வாய்க்கால் பாசனப்பகுதி மற்றும் திருச்சி மாவட்டம், பொன்னனியாறு அணைத்திட்டப் பாசனப்பகுதி விவசாயிகளுக்கு "கிளைமா அடாப்ட்" திட்டத்தின் கீழ் பருவநிலை மாற்றம் மற்றும் அதனை எதிர் கொள்ளும் தொழில்நுட்பப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நிலையத்தில், அரசு நிதி உதவியுடன் 72 பல்வேறு பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. அரசு நிதி உதவி, 'நீர்வள நிலவள' திட்ட நிதி மற்றும் இதர நிறுவனங்களின் வைப்பு நிதியின் மூலம் மொத்தம் 85 பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டன. 121 விவசாயிகள் மற்றும் 1,783 அலுவலர்களை உள்ளடக்கிய 1,904 பங்கேற்பாளர்கள் பின்வரும் பயிற்சிகளின் மூலம் பயனடைந்துள்ளனர்.

| 2015–16–ஆம் ஆண்டு பயிற்சி திட்ட விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண். | நிதி ஆதாரம் | பயிற்சிகளின் எண்ணிக்கை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | | |
| | | | அலுவலர்கள் | விவசாயிகள் | மொத்தம் |
| 1 | பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் (அரசு நிதி) | 72 | 1626 | 0 | 1626 |
| 2 | தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம் | 5 | 104 | 0 | 104 |
| 3 | நபார்டு | 1 | 29 | 0 | 29 |
| 4 | பருவநிலை மாறுதலை எதிர்கொள்ளும் திட்டம் | 6 | 4 | 121 | 125 |
| 5 | வேளாண்மைப் பொறியியல் துறை (ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்டம்) | 1 | 20 | 0 | 20 |
| | **மொத்தம்** | **85** | **1783** | **121** | **1904** |

| 2015–16–ஆம் ஆண்டு பிற மாநில பயிற்சி சுற்றுலா | | | |
|---|---|---|---|
| **நிதி ஆதாரம்** | **பயிற்சி சுற்றுலாக்களின் எண்ணிக்கை** | **பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை** | |
| | | **அலுவலர்கள்** | **விவசாயிகள்** |
| **நீர்வள நிலவளத் திட்டம்** | 1 | 25 | – |
| **பருவநிலை மாறுதலை எதிர்கொள்ளும் திட்டம்** | 1 | 4 | – |
| **அரசு நிதி** | 2 | 5 | – |
| **மொத்தம்** | **4** | 34 | – |

## 12.0. மணல் குவாரி

அரசாணை (நிலை) எண்.451 பொதுப்பணித்துறை, நாள் 03.10.2003–இல் அனைத்து ஆற்றுபடுகைகளிலும் உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு மணல் குவாரிகளை இயக்க பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதாரத்துறைக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. அதன்படி 03.10.2003 முதல் மணல் குவாரிகள் மூலம் மணலானது பொதுமக்களுக்கும் நுகர்வோருக்கும் பொதுப்பணித்துறையின் மூலமாக விற்பனை

செய்யப்பட்டு வருகிறது. முதலில் ஒரு லோடு 2 யூனிட் (200 கன அடி) மணலின் விலை ஏற்றுக்கூலி உட்பட ரூ.1000/– என நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்தது. பின்னர் பொதுமக்களுக்கு கணிசமான விலையில் எளிதாக கிடைக்கும் வகையிலும், கட்டுமானப் பொருட்களின் விலையினை கட்டுப்படுத்தும் நோக்கிலும் அரசாணை (நிலை) எண்.401 பொதுப்பணித்துறை, நாள் 18.06.2004–இன்படி மணல் விலையானது ஒரு லோடு ரூ.1000/–லிருந்து ரூ.600/–க்கு குறைக்கப்பட்டது. தற்போது, ஒரு லோடு (2 யூனிட்) மணலின் விலை, வரிகள் மற்றும் ஏற்றுக்கூலி நீங்கலாக, ரூ.800/– என நிர்ணயித்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் தங்கு தடையின்றி மணல் பெறுவதற்கு அதிக எண்ணிக்கையிலான மணல் குவாரிகளை மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் நெறிமுறைகளின்படி தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் அனுமதி பெற்று நடத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர, மணல் தட்டுப்பாட்டினைக் குறைக்கும் முயற்சியாக மாநிலம் முழுவதும் 61 மணல் குவாரிகள் ஆணையத்தின் அனுமதி பெற்று இயக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம், மணல் தட்டுப்பாடு பெருமளவு குறைக்கப்பட்டு சந்தையில் மணல் விலையானது கணிசமான அளவு குறைந்துள்ளது. 2015–16–ஆம் ஆண்டில், மணல் விற்பனை மூலம் அரசுக்கு ரூ.91.02 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**13.0. கொதிகலன்கள் இயக்ககம்**

கொதிகலன் பணியாளர்கள் மற்றும் கொதிகலன் இயக்கப் பொறியாளர்களுக்கான தேர்வுகளை நடத்திடும் பொறுப்பினை கொதிகலன்கள் இயக்ககம் மேற்கொண்டு வருகின்றது. தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்ககம், உயர் அழுத்த பற்றவைப்பாளர்களுக்கான தேர்வையும் நடத்துகிறது. 2015–2016–ஆம் ஆண்டில் 1,796 பற்றவைப்பாளர் தேர்வுகளை மேற்கொண்டு வெவ்வேறு பிரிவுகளில் 1,796 தேர்ச்சி பெற்ற நபர்களுக்கு கார்பன் ஸ்டீல் மற்றும் அலாய் ஸ்டீல் ஆகிய வகைகளில், ஆழ்குழாய், நெடுங்குழாய் மற்றும் தகடுகள் ஆகிய தர பற்றவைப்பு பணிகளில் தேர்ச்சி பெற்றதை குறிக்கும் வகையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. கொதிகலன்கள் இயக்ககம், கொதிகலன்கள் மற்றும் கொதிகல உதிரி பாகங்களின் உற்பத்திக்கு புதியதாக தொழில் தொடங்குவோர்க்கு உறுதுணையாய் விளங்குவதுடன் அத்தகைய புதிய நிறுவனங்களின் உற்பத்தியை உடனடியாகத் தொடங்குவதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் சட்டரீதியான உதவிகளை அளித்து வருகின்றது.

தமிழ்நாட்டில் 2015–2016–ஆம் ஆண்டில் 324 புதிய கொதிகலன்கள் மற்றும் அதனுடன் இணைந்த குழாயமைப்புகளை, நடப்பிலுள்ள பல்வேறு நிறுவனங்கள் மற்றும் புதியதாய் தோன்றிய நிறுவனங்களில் நிறுவும் பணிக்கு கொதிகலன்கள் இயக்ககம் பதிவு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள 5,120 மொத்தக் கொதிகலன்களின் எண்ணிக்கையில், இயக்கத்திலுள்ள 4,832 கொதிகலன்களின் உற்பத்தி நிலைக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம், குறிப்பிட்ட காலத்தில் ஆய்வினை மேற்கொண்டது. இவை தவிர, 2,22,100 உயர் அழுத்த அடைப்பான்கள், 16,726 உயர் அழுத்த பெரிய குழாய் கட்டமைப்பு சாதனங்கள், 73,105 சிறிய குழாய் கட்டமைப்பு சாதனங்கள் ஆகியவற்றிற்கு உற்பத்தி நிலையில் ஆய்வு மேற்கொண்டு, அவற்றின் தர உத்தரவாதத்திற்கு உரிய சான்றிதழ்களை கொதிகலன்கள் இயக்ககம் உரிய காலத்திற்குள் வழங்கியது. மேலும், கொதிகலன்கள் இயக்ககம் 648 புதிய கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் உதிரி பாகங்களுக்கான சான்றாவணங்கள், 532 வரைபட ஆவணங்கள் (Design Documents) ஆகியவற்றிற்கு 2015–2016–ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்வாயிலாக, தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்கு கொதிகலன்கள் இயக்ககம் அதன் திறமையான செயல்பாட்டினால் உறுதுணையாய் விளங்குகிறது. கொதிகலன்கள் இயக்ககம் கொதிகலன்களின் ஆய்வுக் கட்டணம், கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் உதிரி பாகங்கள், தயாரிப்பு நிலையில் பல்வேறு நிலை ஆய்வுக் கட்டணங்கள், வரைபடங்கள் கூர்ந்தாய்வு கட்டணம், பற்ற வைப்பாளர் தேர்வு ஆய்வுக் கட்டணம் மற்றும் கொதிகல பணியாளர் தேர்வு மற்றும் கொதிகலப் பொறியாளர் தேர்வு ஆய்வுக் கட்டணம் போன்ற பலதரப்பட்ட ஆய்வுக் கட்டணங்கள் வாயிலாக அரசிற்கு வருவாய் ஈட்டும் வகையில் செயலாற்றி வருகின்றது. இவ்வகையில் 2015–2016–ஆம் நிதியாண்டில் ரூ.7.16 கோடி வருவாயைப் பெற்றுத் தந்துள்ளது.

## 14.0. பன்மாநில நதிநீர் பிரச்சனைகள்

### 14.1. காவேரி நதிநீர்த் தாவா

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின்** சீரிய முயற்சிகளாலும், உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களினாலும், மத்திய அரசு, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை 19.02.2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிட்டது. இதனால், காவேரி டெல்டா பகுதியில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை உடனடியாக ஏற்படுத்துவதற்காக 17.10.2011, 20.12.2012, 22.12.1012, 22.02.2013, 11.03.2013, 17.05.2015, 02.09.2013, 03.09.2013, 13.06.2013 மற்றும் 04.09.2015 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேலும், 14.06.2011, 03.06.2014,

**07.08.2015** மற்றும் **14.06.2016** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுக்கு அளித்த கோரிக்கை மனுக்களில் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை ஏற்படுத்த வலியுறுத்தியுள்ளார்கள்.

மேலும், **16.07.2016** அன்று நடைபெற்ற பன்மாநில மன்ற கூட்டத்திலும் இக்கோரிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

இதற்கிடையில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை செவ்வனே செயல்படுத்த ஒரு நிரந்தர ஏற்பாடு அமையும் வரையில், அவ்வாணையை செயல்படுத்துவதற்கு ஒரு தற்காலிக ஏற்பாடாக, காவேரி மேற்பார்வை குழு, உச்ச நீதிமன்றத்தால் **10.05.2013** அன்று அமைக்க ஆணையிடப்பட்டது. இதன்படி, மத்திய அரசு அதன் அரசிதழில் **22.02.2013** அன்று இக்குழுவினை ஏற்படுத்தி அரசிதழில் வெளியிட்டது.

**05.12.2014** அன்று பின்வரும் அரசினர் தனித் தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

**"காவேரி நடுவர் மன்றத்தின் 05.02.2007–ஆம் நாளிட்ட இறுதி ஆணை, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெரும் முயற்சியால் 19.02.2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட போதிலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் இதுவரை அமைக்கப்படவில்லை. எனவே, காவேரியில் தமிழகத்திற்கு உரிய நீர் இந்த இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, மாதாந்திர வாரியாக பெறுவதற்கு ஏதுவாக, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும்."**

இதற்கிடையில் உச்சநீதிமன்றம் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள வழக்குகளை விசாரிப்பதற்காக ஒரு சிறப்பு அமர்வினை அமைத்துள்ளது. இவை விசாரணைக்கு வரும் பொழுது, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடுமாறு வலியுறுத்தப்படும்.

### 14.1.1. கர்நாடக அரசு, மேகதாதுவில் இரண்டு அணைகள் கட்ட முயற்சிப்பதை தடை செய்தல்

கர்நாடக அரசு, மேகதாது எனுமிடத்தில் புதிதாக இரண்டு அணைகள் கட்ட உள்ளதாகவும், இதற்கான, தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கையை தயார் செய்ய தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ‘‘உலகளாவிய விருப்பம் கோரும் அறிவிப்பை (Global Expression of Interest)’’ கோரியுள்ளது என பத்திரிக்கையில் **12.11.2014** அன்று செய்திகள் வந்தன.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளினால், மத்திய அரசு,பிற காவேரி வடிநில மாநிலங்களின் இசைவினைப் பெறுமாறு கர்நாடக அரசை கேட்டுக்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது. மேலும், மேகதாது திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை பெறப்படுமானால் அவற்றை காவேரி மன்ற இறுதி ஆணையின்படி ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** ஆணையின் படி, உச்ச நீதிமன்றத்தில் இப்பிரச்சனைக் குறித்து, **18.11.2014** அன்று ஒரு இடைக்கால மனுவினை தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ளது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனுவும் நிலுவையில் உள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.6.2016** ல் மாண்புமிகு பாரத பிரதமருக்கு அளித்த கோரிக்கை மனுவில், நடுவர் மன்ற இறுதி ஆணைக்கு மாறாக மேகதாதுவில் அணை கட்டும் பணிகளை தொடரக்கூடாது என கர்நாடக அரசை வலியுறுத்துமாறு மீண்டும் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

### 14.1.2. கேரள அரசு பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரியில் அணை கட்டுவதை தடுத்தல்

கேரள அரசு பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்ற இடத்தில் ஒரு அணையை கட்டுவதற்கு பணிகள் துவங்கியுள்ளதாகவும், இதற்கு கேரள முதலமைச்சர் **03.11.2014** அன்று காணொலிக்காட்சி வழியாக அடிக்கல் நாட்டியுள்ளதாகவும் **06.11.2014** அன்று பத்திரிகைகளில் செய்திகள் வந்தவுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாரத பிரதமருக்கு **08.11.2014** அன்று, கேரள அரசு, பாம்பாறு உப படுகையில் கட்ட உத்தேசித்துள்ள அணைகள் பற்றிய அனைத்து விவரங்களை தமிழகத்திற்கு அளிக்கவேண்டும் எனவும் மற்றும் காவேரி மேலாண்மை வாரியம் ஏற்படுத்தும் வரையில் மற்றும் தமிழ்நாட்டின் இசைவு பெற்ற பின்னரே, இத்தகைய திட்டங்களை, கேரள அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும், கேரள அரசுக்கு அறிவுரை வழங்குமாறு கடிதம் அனுப்பினார்கள். மேலும் பாரதப் பிரதமர் அவர்கள் இதில் தலையிட்டு, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை, உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்கள்.

கேரள அரசு மற்றும் மத்திய அரசிடமிருந்து பதில் வராத நிலையில், இப்பொருள் குறித்து உச்ச நீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசு இடைக்கால மனு ஒன்றை, **28.11.2014** அன்று தாக்கல் செய்துள்ளது. இம்மனு நிலுவையிலுள்ளது.

### 14.1.3. கர்நாடகா காவேரியிலும் பெண்ணையாற்றிலும் கழிவு நீரை விடுவதை தடுத்து நிறுத்துதல்

**30.03.2015** அன்று வெளியான பத்திரிக்கைச் செய்திகளில் கர்நாடக சிறுபாசன அமைச்சர் அவர்கள், பெங்களூரு நகரத்திலிருந்து, நாளொன்றுக்கு சுமார் **593** மில்லியன் லிட்டர் கழிவு நீர், காவேரியின் கிளை நதியான அர்க்காவதியிலும், **889** மில்லியன் லிட்டர் பெண்ணையாற்றிலும் விடப்படுகிறது எனக் கூறியதாக தெரியவந்துள்ளது.

காவேரி மற்றும் பெண்ணையாற்றில் சுத்திகரிக்கப்படாத கழிவு நீரை, மத்திய மற்றும் மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகளை பின்பற்றாமல், கர்நாடக அரசு விடுவிப்பதால், தமிழக பகுதியில் வசிக்கும் மக்கள் மற்றும் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படும். கர்நாடக அரசு, கழிவு நீர் மற்றும் தொழிற்சாலை கழிவுகளை ஆற்றில் விடுவதற்கு முன்னர், நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப, சுத்திகரிப்பு செய்து விடுவது அதன் கடமையாகும். அவ்வாறு செய்யத் தவறியதால், தமிழகத்திற்கு பேரிழப்பும், மக்களின் வாழ்வாதாரங்களை பாதிக்கக் கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசு வழக்கு (Original Suit) ஒன்றை உச்சநீதிமன்றத்தில் **05.06.2015** அன்று தாக்கல் செய்தது. மேலும்,அன்றைய தினமே இடைக்கால மனுவையும் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இவ்வழக்கு நிலுவையிலுள்ளது.

### 14.2. முல்லைப் பெரியாறு அணை

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது** தொடர் மற்றும் அயராத முயற்சிகளின் பயனாக, தமிழ்நாட்டின் தென் மாவட்ட வேளாண் பெருமக்கள் மற்றும் ஒட்டுமொத்த தமிழ் மக்களைப் பெரு மகிழ்ச்சியில் ஆழ்த்தும் விதமாக, **27.02.2006** மற்றும் **07.05.2014** ஆகிய தேதிகளில் உச்ச நீதிமன்றம், முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தினை, முதற்கட்டமாக **142** அடிக்கு உயர்த்துவதற்கும், அணையில் எஞ்சியுள்ள பலப்படுத்தும் மற்றும் பராமரிப்புப் பணிகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்வதற்கும் ஆணையிட்டுள்ளது. **07.05.2014** ம் நாளிட்ட உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை, **142** அடிக்கு மீள உயர்த்துவது தொடர்பாக அமைக்கப்பட்ட மேற்பார்வைக் குழு, முல்லைப் பெரியாறு அணையினை **17.07.2014** அன்று ஆய்வு செய்த பின்னர், உச்சநீதிமன்ற தீர்ப்பை செயல்படுத்த முடிவு எடுத்தது. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் **21.11.2014** அன்று **142** அடிக்கு உயர்ந்தது. இது தமிழக மக்களுக்கு **35** ஆண்டுகளுக்குப்பிறகு நிகழ்ந்த ஒரு வரலாற்று சிறப்புமிக்க சாதனையாகும். இச்சாதனையானது **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** அயராத முயற்சிகளாலும், தொடர் வழிகாட்டுதலாலும்

மட்டுமே சாத்தியமானது. மேலும், தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக 07.12.2015 அன்றும் அணையின் நீர்மட்டம் 142 அடிக்கு உயர்ந்தது.

### 14.2.1. நீர்மட்டத்தை +152 அடி வரை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கை.

பேபி அணையை பலப்படுத்துதல் மற்றும் அதனைச் சார்ந்த பணிகளை செய்து முடிப்பதற்கு, அரசு 7.85 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகளை செய்து முடிப்பதற்காக மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் அனுமதி வேண்டி தமிழ்நாடு அரசு விண்ணப்பித்துள்ளது.

இது தொடர்பாக, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,** பாரதப் பிரதமர் அவர்களுக்கு 14.6.2016 அன்று அளித்த கோரிக்கை மனுவில், தேவையான ஒப்புதல்களை விரைவில் அளிக்கசம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மத்திய நீர்வளக்குழுமத்தின் திருப்திக்கு அணையை பலப்படுத்திய பின்னர், உச்ச நீதிமன்ற ஆணைப்படி, தனிப்பட்ட வல்லுநர்கள் பரிந்துரையைப் பெற்று, பெரியாறு அணையின் நீர்மட்டத்தை அதன் முழுக்கொள்ளளவான (FRL) 152 அடியாக உயர்த்துவதற்கு இவ்வரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 14.2.2. கேரள அரசால், முல்லைப் பெரியாறு அணையின் நீர்பரப்பு பகுதியில் மேற்கொள்ளப்படும் பெரும் வாகன நிறுத்தம்

கேரள அரசு, முல்லைப் பெரியாறு அணையின் நீர்பரப்பு பகுதியில் பெரும் வாகன நிறுத்தத்தை நிறுவ திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக கேரள மாநிலத்தினரால், தேசிய பசுமை தீர்பாயம் (தென் மண்டலம்) முன்பு 2 மனுக்கள் ஏற்கெனவே தனிநபர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், தமிழ்நாடு அரசு தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் தன்னையும் ஒரு எதிர்வாதியாக வழக்கில் உட்படுத்தவும், எதிர்வாதிகள் மேற்கொண்டிருக்கும் எந்தவொரு கட்டுமான பணி மற்றும் மண் கொண்டு நிரப்புதல் அல்லது இது தொடர்புடைய வளர்ச்சி பணிகளை தமிழ்நாடு அரசின் உடைமையில் உள்ள குத்தகை பகுதியில் மேற்கொள்ளக் கூடாது என்று கட்டுப்படுத்துகிற தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது. இது தேசிய பசுமை தீர்ப்பாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 05.09.2014 அன்று மூன்றாவது எதிர்வாதியான துணை இயக்குநர், புலிகள் பாதுகாப்புத் திட்டம் அவர்களுக்கு அன்றைய நிலையே தொடர வேண்டும் என்றும், மேலும் எவ்வித வளர்ச்சி மற்றும் கட்டுமான பணிகள் இடுக்கி மாவட்டத்தில் உள்ள பெரியாறு புலிகள் சரணாலயத்தில் 26.09.2014 வரை மேற்கொள்ளக் கூடாது என்று ஆணையிட்டது.

இதில் பெரியாறு நீர்த்தேக்கப் பகுதியும் அடங்கும். 29.09.2014 அன்று வழக்கு விசாரணைக்கு வந்த போது, தேசிய பசுமை தீர்ப்பாயம் (தென் மண்டலம்) மேலும் ஆணை வழங்கும் வரை அன்றைய நிலையே தொடரும் என்று ஆணையிட்டது. இவ்வழக்குகள் இன்னமும் நிலுவையில் உள்ளன.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** ஆணைப்படி, தமிழ்நாடு அரசு, 1886–ம் ஆண்டின் உடன்படிக்கையின்படியும் மற்றும் 1970ம் ஆண்டு துணை ஒப்பந்தப்படி உறுதி செய்யப்பட்டுள்ள தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள குத்தகை நிலத்தில் ஒரு பெரிய வாகன வளாகம் அமைக்கும் கட்டுமானப் பணிகளை மேலும் எடுத்துக் கொள்ளக்கூடாது எனவும், கேரள அரசு ஆக்கிரமிப்பு செய்த பகுதியை மீண்டும் அதே நிலைக்கு கொண்டு வரவும் ஒரு நிரந்தர தடை தீர்ப்பு ஆணை வேண்டி, உச்சநீதிமன்றத்தில், 26.09.2014 அன்று ஒரு சிவில் வழக்கும் (OS No.4 of 2014),1886–ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி தமிழக அரசின் குத்தகை நிலத்தில் கேரள அரசு பெரிய வாகன வளாகம் அமைக்கும் கட்டுமானப்பணிகளை மேலும் எடுத்துக் கொள்ளக்கூடாது என ஒரு இடைக்கால தடுப்பாணை மனுவையும் தாக்கல் செய்துள்ளது.

தமிழகத்தின் சிவில் வழக்கு மற்றும் இடைக்கால மனுவிற்கு கேரள அரசு தனது பதிலறிக்கையை 01.10.2015 அன்று தாக்கல் செய்துள்ளது. அதற்கான பதில் மனுவும் 2.3.2016 அன்று தமிழக அரசால் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

**14.2.3. கேரள அரசின் புதிய அணை கட்டும் திட்டத்திற்கு, கேரள அரசு மேற்கொள்ளவிருக்கும் சுற்றுச்சூழல் தாக்கம் பற்றிய (EIA) ஆய்வை தடைசெய்தல்**

உச்ச நீதிமன்றம் 07.05.2014 அன்று அளித்த தீர்ப்பில், தற்போது உள்ள முல்லைப் பெரியாறு அணை நீரியல், கட்டுமான அடிப்படையிலும் மற்றும் நில நடுக்கம் ஏற்பட்டாலும், முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பாக இருக்கும் என்று தெளிவாக தெரிவித்ததுடன், புதிய அணை கட்டுவது தொடர்பாக, இரண்டு மாநிலங்களுக்கிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், கேரளாவின் புதிய அணை கட்டும் திட்டத்தை தமிழகத்தின் மீது திணிக்க கூடாது என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. எனவே, கேரள அரசின் புதிய அணை திட்டத்தை தடை செய்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இருப்பினும், தன்னிச்சையாக கேரள அரசு புதிய முல்லைப் பெரியாறு அணை கட்டவிருக்கும் தளத்தில், சுமார் 10 கிலோமீட்டர் ஆரத்தில் (radius) சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீட்டை மேற்கொள்ள, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின், வன விலங்கு தேசிய வாரிய (National Board for Wildlife) நிலைக் குழுவிடமிருந்து (Standing Committee) அனுமதி பெற்றுள்ளது.

இது தொடர்பாக, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13.12.2014** அன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், சுற்றுச்சூழல் தாக்கம் பற்றிய ஆய்வு மேற்கொள்ள, வன விலங்கு தேசிய வாரியம் அளித்த அனுமதியை திரும்பப் பெறுமாறு, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திற்கு ஆணையிடுமாறு வலியுறுத்தினார்கள்.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்**, பாரதப் பிரதமர் அவர்களுக்கு **10.06.2015** தேதியிட்ட கடிதத்தில், கேரள அரசின் புதிய அணைக்கான சுற்றுச்சூழல் தாக்கம் அளித்த ஆய்விற்கான இனங்ளை மத்திய அரசு எடுத்துக்கொண்டதே, உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு மே மாதம் 7 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவை அப்பட்டமாக மீறுவதாகும் என்றும், எனவே இந்த பிரச்சனையில் தனிப்பட்ட முறையில் தலையிட்டு, கேரள அரசின் இந்த கோரிக்கையை வருங்காலத்தில் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளாமல் தடுக்க, மத்திய சுற்றுச்சூழல், வனங்கள், பருவநிலை மாற்றங்கள்துறை அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும், அதனை நிராகரித்து கேரள அரசிற்கே திருப்பி அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்கள்.

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் **15.07.2015** நாளிட்டு தமிழ்நாடு அரசுக்கு அனுப்பிய கடிதத்தில்,**2006**–இன் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த ஆய்வின் அறிவிப்பின் படி, புதிய அணை கட்டுவது தொடர்பாக, சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த ஆய்விற்கான இனங்களுக்கு கேரள அரசின் திட்டங்கள் உச்சநீதிமன்றத்தின் ஆணைப்படி ரத்து செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தது.

மேலும், **04.08.2015** தேதியிட்ட கடிதத்தில் மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் இந்த பிரச்சினைக்கான கோப்பை முடித்து விட்டதாகவும், அதன் வலைத்தளத்திலிருந்து எடுத்து விட்டதாகவும் தெரிவித்துள்ளது. இவ்விவரம் கேரள அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கேரள அரசு தன்னிச்சையாக மேற்கொண்ட புதிய அணை கட்டும் திட்டம் மற்றும் அது தொடர்பான ஆய்வு,தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

### 14.3. பாலாறு

ஆந்திர அரசு, சித்தூர் மாவட்டம், குப்பம் தாலுக்காவில் கணேசபுரம் என்ற இடத்தில் **0.6** டி.எம்.சி. அடி கொள்ளளவு கொண்டுள்ள நீர்த்தேக்கத்தை குப்பம் நகரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளுக்கு பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக கட்ட உத்தேசித்ததை அடுத்து, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது** ஆணையின்படி,

தமிழ்நாடு அரசு 10.02.2006 அன்று இடைக்கால மனுவுடன் கூடிய அசல் வழக்கை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.6.2011** அன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு அளித்த கோரிக்கை மனுவில் பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு கட்ட உள்ள அணைக்கான எந்த ஒரு பணியினையும் மேற்கொள்ளக் கூடாது என அவ்வரசுக்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்கள்.

இதற்கிடையே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு, பெரும்பள்ளம் கிராமத்தில், சித்தூர் மாவட்டத்தில், ஆந்திரா–தமிழ்நாடு எல்லைக்கு அருகில் அமைந்துள்ள தடுப்பணையின் உயரத்தை, தன்னிச்சையாக 5 அடியிலிருந்து 12 அடிவரை உயர்த்தியுள்ளதாக செய்தி வந்தவுடன், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** 01.07.2016 அன்று ஆந்திர மாநில முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில், தமிழ்நாட்டின் வலிமையான எதிர்ப்பை தெரிவித்ததுடன், ஆந்திர முதலமைச்சர் இப்பிரச்சனையில் தலையிட்டு, உடனே அந்த தடுப்பணையின் உயரத்தை பழைய நிலைக்குக் கொண்டுவரவும்,இயற்கையாக ஓடுகின்ற நீரை தமிழ்நாட்டிற்கு வருவதற்கு ஏதுவாக அதிகாரிகளுக்கு உரிய அறிவுரையை வழங்கும்படி கேட்டுக்கொண்டார்கள். இதற்கிடையே, ஆந்திர அரசு, அதன் எல்லைக்குள் பாலாற்றின் குறுக்கே அமைந்துள்ள மேலும் மூன்று தடுப்பணைகளின் உயரத்தை 0.5 மீட்டர் முதல் 1.5 மீட்டர் வரை உயர்த்தியிருப்பதாக, செய்தி வந்தவுடன், தமிழ்நாடு அரசு அதன் எதிர்ப்பை தெரிவித்துக்கொண்டதுடன், அச்செயல்கள் 1892 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மதராஸ்–மைசூர் ஒப்பந்தத்திற்கு எதிரானது என்றும், இவ்வணைகளின் உயரத்தை பழைய நிலைக்கு கொண்டுவரவேண்டும் என்றும் நீரை கூடுதலாக தேக்கிவைக்க கூடாது என்றும், புதிதாக எந்த அணையையோ / தடுப்பணையையோ கட்டக்கூடாது என்றும் 11.07.2016 அன்று தமிழ்நாடு அரசு ஆந்திர அரசுக்கு அனுப்பிய கடிதத்தில் வலியுறுத்தப்பட்டது.

தமிழ்நாடு அரசு, மத்திய அரசின் நீர் ஆதார அமைச்சகத்திற்கு 11.7.2016 அன்று அனுப்பிய கடிதத்தில், இப்பிரச்சனை குறித்து, மத்திய அரசு தலையிட்டு, ஆந்திர அரசுக்கு தக்க அறிவுரை வழங்கவேண்டி கேட்டுக்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டின் கோரிக்கையின் மீது ஆந்திர அரசோ அல்லது மத்திய அரசோ நடவடிக்கை மேற்கொள்ளாததால், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசு, 18.7.2016 அன்று இப்பிரச்சினை குறித்த வழக்கு மற்றும் இடைக்கால மனுவினை, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.இவைகளில், உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டி தமிழ்நாடு அரசு கோரியுள்ளவைகள் வருமாறு:-

**(அ) வழக்கில் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள்**

(i) தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் ஆந்திரப்பிரதேச அரசு பாலாற்றின் குறுக்கே தன்னிச்சையாக தற்போதுள்ள தடுப்பணைகளின் உயரத்தினை உயர்த்தியுள்ளதும் மற்றும் புதிய தடுப்பணைகளை கட்டியதும், முரணானது மற்றும் தமிழ்நாடு மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் என அறிவித்தல்;

(ii) பாலாற்றின் குறுக்கே ஆந்திரப்பிரதேச அரசு, பெரும்பள்ளம் கிராமம், கங்கணஉறள்ளி, சித்தாவூர் மற்றும் கங்குந்தி ஆகிய இடங்களில் உயர்த்தப்பட்டுள்ள தடுப்பணைகளை அதன் முன்பிருந்த நிலைக்கு மீளக் கொண்டு வர வேண்டும் என தவிர்க்க இயலாத உறுத்துக்கட்டளை பிறப்பித்தல்;

(iii) ஆந்திரப்பிரதேச அரசு, பாலாற்றிலும் மற்றும் அதன் கிளையாறுகளிலும் உள்ள தடுப்பணைகள் / நீரைத் திருப்பும் கட்டுமானங்கள் ஆகியவற்றின் உயரத்தை உயர்த்துவதை தடுத்து நிறுத்த வேண்டி, நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தல்;

(iv) பாலாறு மற்றும் அதன் கிளை ஆறுகளின் குறுக்கே ஆந்திரப்பிரதேச அரசு, கட்டியுள்ள புதிய தடுப்பணைகளை அகற்றுமாறு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்குதல்;

(v) ஆந்திரப்பிரதேச அரசு, கூடுதலாக நீரைத் தேக்கி வைக்காமலிருப்பதற்கும் மற்றும் பாலாறு மற்றும் அதன் கிளை ஆறுகளில் இயற்கையாக ஓடுகின்ற நீரை தமிழ்நாட்டிற்கு செல்வதை தடுத்து நிறுத்தாமல் இருப்பதையும் உறுதிப்படுத்தவேண்டும் என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தல்;

(vi) பாலாறு மற்றும் அதன் கிளை ஆறுகளின் குறுக்கே தமிழ்நாட்டின் முன் இசைவு பெறாமல், ஆந்திரப்பிரதேச அரசு புதிய தடுப்பணை / நீர்த் திருப்புக் கட்டுமானம் / தற்பொழுதுள்ள எந்த ஒரு கட்டுமானத்தையும் / கட்டுமானங்களையும் உயர்த்துதல் அல்லது தற்பொழுதுள்ள கட்டுமானங்களுக்கு மாற்றம் செய்தல் போன்றவற்றை மேற்கொள்ளக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தல்

(vii) ஆந்திரப்பிரதேச அரசு மேற்கொண்டுள்ள தடுப்பணைகள் மற்றும் நீர் திருப்பும் கட்டுமானங்கள் குறித்து மத்திய அரசுக்கு **11.7.2016** அன்று அனுப்பப்பட்ட கடிதத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தவிர்க்க இயலாத உறுத்துக்கட்டளை பிறப்பித்தல்;

(viii) உச்சநீதிமன்றம் கருதும் வகையில், தீர்ப்பாணை அல்லது தீர்ப்பாணைகள் அல்லது ஆணை அல்லது ஆணைகள் போன்றவற்றைப் பிறப்பித்தல்;

**(ஆ) இடைக்கால மனு - கோரிக்கைகள்**

(i) இந்த வழக்கு முடிவுக்கு வரும் வரையில், ஆந்திரப்பிரதேச அரசு பாலாற்றின் கிளை ஆற்றுகளில் அதாவது வீர மலை வனப்பகுதியில் தேப்ரேவு, பவலன்கோ என்ற இடங்களில் 5 புதிய தடுப்பணை கட்டுவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது என்ற இடைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பித்தல்;

(ii) இந்த வழக்கு முடிவுக்கு வரும்வரையில், பாலாற்றின் குறுக்கே தற்பொழுது உயர்த்தப்பட்டுள்ள தடுப்பணைகளில் அந்த தடுப்பணைகள் உயர்த்தப்படுவதற்கு முன்பாக சென்று கொண்டிருந்த இயற்கையான நீர் தமிழ்நாட்டுக்குச் செல்வதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் மற்றும் பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணைகள் கட்டக்கூடாது எனவும் ஓர் இடைக்கால உறுத்துக் கட்டளை வழங்குதல்;

(iii) உச்சநீதிமன்றம் கருதும் வகையில், தீர்ப்பாணை அல்லது தீர்ப்பாணைகள் அல்லது ஆணை அல்லது ஆணைகள் போன்றவற்றை பிறப்பித்தல்;

## 14.4. பெண்ணையாறு

பெண்ணையாறு, 1892–ம் ஆண்டைய மதராஸ்–மைசூர் ஒப்பந்தம், ‘‘அட்டவணை–அ’’ வில் குறிப்பிடப்பட்டுள்ள 15 நதிகளில் ஒன்றாகும். அதில், உட்பிரிவு 2ன்படி, நதியின் மேற்பகுதி உள்ள மாநிலம், கீழ்ப்பகுதி உள்ள மாநிலத்தின் இசைவினைப் பெறாமல், நீரைத் தேக்கவோ அல்லது திசை திருப்புவதற்கோ, எந்தவொரு அணைக்கட்டு மற்றும் கட்டுமானங்களை நதியின் குறுக்கே எவ்விடத்திலும் ஏற்படுத்தக்கூடாது.

கர்நாடக அரசு, பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணை மற்றும் நீரைத் திருப்பிவிடும் கட்டுமானங்களை ஏற்படுத்த திட்டமிட்ட போது, இப்பிரச்சனை குறித்து **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19.05.2012** அன்று பாரதப்பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணை அல்லது நீரைத் திருப்புவதற்கான கட்டுமானங்கள் ஏதும் நீர் செல்வதைத் தடுக்கும் வகையில் கர்நாடக அரசு கட்டுமேயானால், அது தமிழக விவசாயிகளுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், மேலும் தமிழ்நாடு ஏற்கனவே கேட்டுக் கொண்டவாறு, கர்நாடக அரசு விபரங்களை அளிக்கவில்லை மற்றும் இசைவினைப் பெறவில்லை எனத் தெரிவித்து,பாரதப் பிரதமர் அவர்கள் இப்பிரச்சனையில் தலையிட்டு,

பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டும் நடவடிக்கைகளை கர்நாடக அரசு உடன் நிறுத்துமாறு அறிவுரை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.இதன் தொடர்ச்சியாக, பெண்ணையாற்றின் குறுக்கே நடைபெறும் கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டியும் மற்றும் தமிழ்நாட்டின் முன் இசைவின்றி எந்தவொரு திட்டத்தையும் கர்நாடகா மேற்கொள்ளக் கூடாது என அறிவுறுத்த வேண்டியும் 27.03.2013 அன்று **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** பிரதமர் அவர்களை மீண்டும் வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மத்திய நீர் ஆதார அமைச்சர், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு** 30.09.2013 அன்று அனுப்பிய கடிதத்தில், மத்திய அரசு சார்பாக ஒரு குழு, கர்நாடகத்தில் பெண்ணையாறு படுகையில், முகலூர் என்ற இடத்தில், நீரைத் திருப்புவதற்கு ஏதேனும் கட்டுமானப் பணிகள் செயல்படுகின்றனவா என ஆய்வு செய்வதற்கு, மத்திய நீர்வள குழுமத்தினால் அனுப்பப்பட்டதாகவும் அங்கு 1892–ஆம் ஆண்டைய மதராஸ்–மைசூர் ஒப்பந்தத்தை மீறும் வகையில், எவ்விதக் கட்டுமானப் பணிகளும் செயல்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மத்திய நீர் ஆதார அமைச்சகம், தனது 14.02.2014 நாளிட்ட கடிதத்தில், மத்திய நீர்வளக் குழுமத்தில், மார்க்கண்டேய நதியின் குறுக்கே, தடுப்பணையை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை ஏதும், பன்மாநில நதி நீர் என்ற வகையில், ஆய்விற்காக பெறப்படவில்லை என தெரிவித்துள்ளது.மேலும், 05.03.2015 நாளிட்ட கடிதத்திலும்இந்நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கர்நாடக அரசு, சுத்திகரிக்கப்படாத கழிவு நீரை காவேரி, பெண்ணையாறு கிளைநதிகள் மற்றும் உபநதிகளில் கலக்க விடுவதை முழுவதுமாக தடை செய்ய வேண்டி, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் 05.06.2015 அன்று, வழக்கு ஒன்றையும் (Original Suit) மற்றும் இடைக்கால மனுவையும் தாக்கல் செய்துள்ளது. இவ்வழக்கு நிலுவையிலுள்ளது.இதற்கிடையில், தென்மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் இப்பிரச்சனை தொடர்பாக தனிநபர் (Individual)தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு அரசு 14.10.2015 அன்று பதில் மனுவை தாக்கல் செய்துள்ளது. இந்த மனு நிலுவையிலுள்ளது.

தமிழ்நாடு அரசு பெண்ணையாற்று நீரையே சார்ந்துள்ள விவசாயிகளுடைய நலனை பாதுகாக்கும் பொருட்டு, தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**எடப்பாடி கே. பழனிசாமி**
**பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும்**
**சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்**